கலை இலக்கிய முத்திங்கள் இதழ்

# அவரி

09

ஒளி – 03 கதிர் – 01 ஜனவரி – மார்ச் 2024



## பாதுகாக்கப்பட வேண்டிய சிறுமலர்கள்...

மகளிர் தின சிறப்புக் கட்டுரை

- **இருதய அடைப்பு / மாரடைப்பு**
  ஒருமுறை நெஞ்சு வலி வந்தால்கூட மருத்துவரை அணுகி பரிசோதித்துக் கொள்வது அவசியம். நெஞ்சு வலி இருப்பவர்க்கு மாரடைப்பு வரும் வாய்ப்பு அதிகம். சரியாகக் கையாண்டால் வலி வராமல் தடுத்து ஆரோக்கியமாக...

- **காளான் உற்பத்தி மூலம்...**
  இக்காளான் செலவு குறைந்த மூலதனம், நேரம், தொழில்நுட்ப அறிவு என்பனவற்றைக் கொண்டு சுயதொழில் ஆக பெண்களால் மேற்கொள்ளக் கூடிய ஒரு தொழிலாக உள்ளமையால் மனைப் பொருளாதாரத்தில் ஒன்றரை மாத காலத்திலேயே வருமானம்...

- **பெண்ணெனும் பேராண்மை**
  தரணிதனில் சாதனைகள் படைத்து தன்னம்பிக்கையோடு வாழ்ந்திடும் பெண்மை என்றும் இனிதடா...

### சம்மாந்துறை மஷூரா

சம்மாந்துறையை பிறப்பிடமாகவும் தற்போது மருதமுனையை வசிப்பிடமாகவும் கொண்டவர் சித்தி மஷூரா சுஹூறுத்தீன். 1979இல் மஷூரா ஏ மஜீத் என்ற பெயரில் வானொலியில் எழுத ஆரம்பித்து இலங்கையின் தேசிய பத்திரிகைகள் அனைத்திலும் பல சஞ்சிகைகளிலும் எழுதியவர். கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், பாடல், வில்லுப் பாடல், பிறைப்பாடல், தாளலயம், பேச்சு, சித்திரம், கைப்பணி, சஞ்சிகை என...

350/-

SRI LANKA PEN CLUB

ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான Sri Lanka Pen Club வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024 SLPC நிர்வாக செயற்குழு



தலைவர்
சம்மாந்துறை மஷ்ஹூறா



உப தலைவர்
மர்ளியா சக்காப்
திருகோணமலை



உப தலைவர்
SU கமர்ஜான் பீபீ
ஹூனுப்பிட்டி



பொதுச் செயலாளர்
ஷாமென் நிசாம்டீன்
கடடுகஸ்தோட்டை



இணைச் செயலாளர்
முப்லிஹா பிர்தௌஸ்
காத்தான்குடி



பொருளாளர்
நௌஷா ஜமால்தீன்
சம்மாந்துறை



கணக்காய்வாளர்
NM ஆரிபா
ஏறாவூர்



ஊடகச் செயலாளர்
பாரா தாஹிர்
மாவனெல்லை



ஊடகச் செயலாளர்
றம்ஸானா ஸமீல்
அக்கரைப்பற்று



நிதிச் செயலாளர்
ஊஸானா முனாஸ்
மூதூர்



தலைவருக்கான
இணைப்பாளர்
அஸ்மா தீன்
கம்பளை



செயலாளருக்கான
இணைப்பாளர்
ஜெஸ்மின் ரமீஸ்
காத்தான்குடி



விழா இணைப்பாளர்
லைலா அக்ஷியா
மொரட்டுவ



விழா இணைப்பாளர்
MP பர்சானா
நிந்தவூர்



வெளியீட்டு
இணைப்பாளர்
நபீஸா எம் மபாஸ்
கல்முனை



வெளியீட்டு
இணைப்பாளர்
சித்தி ஜெஸீனா
நிஸ்றீன்



தொழினுட்ப
இணைப்பாளர்
ரஹீமா இன்ஷார்
மீராவோடை



தொழினுட்ப
இணைப்பாளர்
ஹக்கீமா அமீனுதீன்
வாழைச்சேனை



பொது இணைப்பாளர்
லறீபா பதூர்டீன்
கலேவல



பொது இணைப்பாளர்
வஃபீறா வாஃபீ
கொழும்பு



நிகழ்ச்சிக்
கட்டுப்பாட்டாளர்
அறபா மன்சூர்
கண்டி



நிகழ்ச்சிக்
கட்டுப்பாட்டாளர்
ஜூவைரியா சதீக்
தம்பாலை



நிகழ்ச்சிக்
கட்டுப்பாட்டாளர்
ஜஸூரா ஜலீல்
மலேசியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான Srilanka Pen Club**
**வெளியீடு**
**அவரி - 09**
**கலை இலக்கிய முத்திங்கள் இதழ்**
**ஜனவரி - மார்ச் 2024**
**ஒளி - 03 கதிர் - 01**

**ஆசிரியர் குழு**

**நிர்வாக ஆசிரியர்** - சம்மாந்துறை மஷூரா

**இதழாசிரியர்** - சுஸானா முனாஸ் - மூதூர்.

**செயற்குழு உறுப்பினர்கள்**
- ஷாமென் நிஸாம்டீன் - கட்டுகஸ்தோட்டை
- என்.எம்.ஆரிபா - ஏறாவூர்
- லைலா அக்ஷியா - மொரட்டுவ
- Dr. ஜலீலா முஸம்மில் - ஏறாவூர்.
- வ.்.பீரா வ.்.பி - கொழும்பு
- அறபா மன்சூர் - கண்டி
- பர்ஸானா எம்.பி. - நிந்தவூர்.
- முப்லிஹா பிர்தௌஸ் - காத்தான்குடி.
- அஸ்மா தீன் - கம்பளை
- பாரா தாஹிர் - மாவனெல்ல.
- மர்ளியா ஸக்காப் - திருகோணமலை
- ஹக்கீமா அமீனுதீன் - ஓட்டமாவடி.

**நிர்வாக அலுவலகம்**
- மஷூறா மஹால், 4C/5 லேக் வீதி, மருதமுனை – 04.
- 0765363434/ 0770636559/ 0672261044
- ISSN 2961-5194

**விலை** - 350/=

**பக்கங்கள்** - 44 + viii

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூரநோக்கு

கலாச்சாரத்தினூடாக கலை இலக்கியங்களைக் கட்டியெழுப்புவதும்
ஆற்றலுள்ள பெண்களை ஆற்றலுலகில் சஞ்சரிக்கச் செய்வதும்

## நோக்கக் கூற்று

முஸ்லீம் பெண் எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் களங்கள் அமைத்து அவர்தம் ஆற்றல்களை மேம்படுத்தல்.

## Sri Lanka pen club கீதம்.

ஆற்றலும் அறிவும் ஆளுமைச் செறிவும்
அனைத்துயர் பெண்களே நாங்கள்.
Sri lanka pen Club....!!!

பொறுமையில் பூமி கருணையில் மாரி
கருவினில் திருவை சுமந்திடும் மாதா
வெறுமையில் கூட செழுமையாய் நேசம்
வளர்த்திடும் ஜீவன் சுமைதாங்கி.

கலைகளும் செய்வோம் சமையலும் செய்வோம்
கரங்களில் எழுதுகோல் உண்டு
சிலைகளாய் எம்மை எண்ணிடும் கூட்ட
சிந்தனைக் கிளர்வில் தளைப்போம்

உலகம் எங்கும் துயருறும் நாங்கள்
உயிர்த்திடும் பீனிக்ஸ் பறவை
கலாச்சார மீறல்களற்ற தோருயர்வில்
களித்திடும் இலக்கில் நிறைவோம்

அகமெனும் கடலின் கரையே விழியாய்
ஆனதெம் வாழ்வு உலகில்
சிதைத்திடும் போதும் ஒருதுளி மழையில்
தளைத்திடும் புல்லென நிமிர்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024 SLPC நிர்வாக செயற்குழு

**தலைவர்.**
சம்மாந்துறை மஷ்ஹூறா.

**உப தலைவர்கள்.**
மர்ளியா சக்காப் (திருகோணமலை)
SU. கமர்ஜான் பீபீ (ஹுனுப்பிட்டி)

**பொதுச் செயலாளர்.**
ஷாமென் நிசாம்டீன் (கட்டுகஸ்தோட்டை)

**இணைச் செயலாளர்.**
முப்லிஹா பிர்தௌஸ் (காத்தான்குடி)

**பொருளாளர்.**
நௌஷா ஜமால்தீன் (சம்மாந்துறை)

**கணக்காய்வாளர்.**
NM. ஆரிபா(ஏறாவூர்)

**ஊடகச் செயலாளர்கள்.**
பாரா தாஹிர் (மாவனெல்லை)
றம்ஸானா ஸமீல் (அக்கரைப்பற்று)

**நிதிச் செயலாளர்.**
சுஸானா முனாஸ்(மூதூர்)

**தலைவருக்கான இணைப்பாளர்.**
அஸ்மா தீன்(கம்பளை)

**செயலாளருக்கான இணைப்பாளர்.**
ஜெஸ்மின் ரமீஸ் (காத்தான்குடி)

**விழா இணைப்பாளர்கள்.**
லைலா அக்ஷியா (மொரட்டுவ)
MP. பர்சானா (நிந்தவூர்)

**வெளியீட்டு இணைப்பாளர்கள்.**
நபீஸா எம் மபாஸ் (கல்முனை)
சித்தி ஜெஸீனா நிஸ்ரீன் (சாய்ந்தமருது)

**தொழினுட்ப இணைப்பாளர்கள்.**
ரஹீமா இன்ஷார் (மீராவோடை)
ஹக்கீமா அமீனுதீன் (வாழைச்சேனை)

**பொது இணைப்பாளர்கள்**
லறீபா பதூர்டீன் (கலேவல)
வ.்.பீறா வா.்.பீ (கொழும்பு)

**நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளர்கள்.**
அறபா மன்சூர் (கண்டி)
ஜுவைரியா சதீக் (தம்பாலை)
ஜஷ்ரா ஜலீல் (மலேசியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


- ❖ நிர்வாக ஆசிரியரின் செய்தி.
- ❖ இதழாசிரியர் உள்ளத்திலிருந்து...
- ❖ சிறுகதை - விலங்கு.
- ❖ கவிதை - பெண் எனும் பேராண்மை.
- ❖ சிறப்புக்கட்டுரை - பாதுகாக்கப்பட வேண்டிய சிறுமலர்கள்.
- ❖ சிறுகதை - சிவப்புக்கோடு.
- ❖ கவிதை - அழகியின் கனவு.
- ❖ கவிதை - துணைவியாய் ஒரு பயணம்.
- ❖ கட்டுரை - விதவைகளுக்கு மறுவாழ்வளித்த இஸ்லாம்.
- ❖ செவ்வி - இலக்கியவித்தகர் சம்மாந்துறை மசூறாவுடனான நேர்காணல்.
- ❖ கவிதை - கல்யாணக் கனவுகள்.
  - ❖ வ.்.பீரா வ.்.பீயின் "புள்ளியில்லாக் கோலம்" ரசனைக் குறிப்புகள்.
  - ❖ விளம்பரம்
- ❖ சிறுகதை - கீதாவின் புரட்சி.
- ❖ கவிதை - தாய் எனும் பெருவிருட்சம்.
  - ❖ சமையல் குறிப்புகள்.
- ❖ மருத்துவக்கட்டுரை - இருதய அடைப்பு/ மாரடைப்பு.
- ❖ கவிதை - பெண்குழந்தைகளே கவனம்
- ❖ கட்டுரை - விவசாயத்தில் காளான் உற்பத்தி மூலம் மனைப் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு.
- ❖ சிறுகதை - தெளிவடைந்த உள்ளம்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாக ஆசிரியரின் செய்தி



அஸ்ஸலாமு அலைக்கும்.

ஒன்பதாவது அவரியில் சந்திப்பதையிட்டு பேருவகை கொள்கிறேன். ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பான SRI LANKA PEN CLUB இன் களம் அமைக்கும் பணியில் இத்தனை தூரம் கடந்திருப்பதே உற்சாகத்தைத் தருகிறது. சஞ்சிகைகள் யாவும் தொடங்கிய வேகத்திலிருந்து சீக்கிரமே தொலைந்து போகின்றன. அதற்கான முக்கிய காரணமே பொருளாதாரம்தான். அவரியின் தடையற்ற பயணத்திற்கு காரணம் நிதிமூலமும் அல்ல. எமது அவரி சஞ்சிகைக் குழுவினரின் மனமார்ந்த ஒத்துழைப்புதான்.

ஒவ்வொரு இதழ்களுக்கும் ஒவ்வொருவர் ஆசிரியர் என்ற வகையில் இந்த ஒன்பதாவது அவரியின் ஆசிரியராக மூதூர் சுசானா முனாஸ் பொறுப்பேற்றார். சுஸானா மக்கீன் என்ற பெயரில் எண்பதுகளின் ஆரம்பத்தில் எழுத்துலகில் பிரகாசித்துக் கொண்டிருந்தவர்தான் சுசானா முனாஸ். என் அன்புத்தோழியும் கூட. நிதானமான போக்கும் பின்விளைவுகளை சிந்தித்து முடிவெடுக்கும் திறனும் அமையப் பெற்றவர்.

இந்தப் பண்பு சஞ்சிகை ஆக்கத்திலும் செல்வாக்கு செலுத்தி வெற்றிகரமாக நகர்த்த ஏதுவாகியிருக்கும். ஒற்றைப் பனை என்ற சிறு கதைத் தொகுதியொன்றை எழுத்துலகிற்கு கையளித்திருக்கிறார். எனினும் பத்திரிகை முயற்சி இவருக்கு கன்னி முயற்சியேயாம்.

ஆக்கங்களைத் திட்டமிட்டுப் பெறுவதிலேதான் அதிக சிரமங்களிருக்கின்றன. திட்டமிடாமல் பெறுவதில் காத்திரமாக வெளியிடமுடியாத சவாலிருக்கிறது. எந்த விடயமும் திட்டமிடாமல் சரியான அடைவைத் தராது.

முயற்சிக்கேற்பவே அடைவுகளும் பயனும் கிடைக்கின்றன.

எமது அமைப்பின் வளர்ச்சியை தெளிவாக காட்டும் ஒரு ஊடகமாகவும் அவரி திகழ்கிறது. எதிர்காலத்தில் அமைப்பிற்கு வெளியே இருந்தும் ஆக்கங்கள் பெறவும் பரவலாக்கவும் உத்தேசித்திருக்கிறோம். பெண்களின் பிரச்சினைகளைப் பேசுவதற்கான களமாகவும் படைப்பாளர்கள் இதனைக் கையாளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகக் கட்டமைப்பில் முஸ்லிம் பெண்களின் பிரச்சினைகள் சவால்கள் ஏனைய சமூகப் பெண்களிலிருந்து மாறுபட்டவை.அதனை இனம் காணவும் தீர்வுகளை சமயோசிதமாக கையாளவுமான ஆற்றல்களை எமது பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதை மகளிர் தின செய்தியாக முன் வைக்கிறேன்.

ஆணும் பெண்ணும் ஒருத்தருக்கொருத்தர் அன்பு செலுத்தி புரிந்துணர்வு பேணி விட்டுக் கொடுத்து குடும்பக் கட்டமைப்பு சிதையாமல் வாழ்வதே அறம். ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்வதற்காக குடும்பக் கட்டமைப்பை சிதைப்பதென்பது நடத்தை முரணுக்கு உட்பட்ட விடயம். அடுத்தவர்களை பாதிக்காது பெண்களுக்கு நலன் பயக்கும் அத்தனை உரிமைகளும் நிச்சயமாய் எங்களுக்கு வேண்டும்.ஆனால் அவற்றை அகிம்சை வழியில் போராடிப் பெறவேண்டும்

ஆற்றலுள்ள எமது பெண்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் பயணத்தில் தந்தைமார் கணவர்கள் சகோதரர்கள் மகன்கள் மருமக்கள் என பல்வேறு பாத்திரங்களையேற்ற உன்னதமான ஆண்களின் தட்டிக் கொடுத்தல்கள் ஊக்குவிப்புகள் பாராட்டுகள் போன்ற இன்னோரன்ன சிறந்த பிரதிபலிப்புகள்தான் இடையறாத எமது பயணத்தின் மைல்கற்களாக இருப்பது மிகவும் ஆரோக்கியமான விடயமாயிருக்கிறது.

எனவே எங்கள் வெற்றிப்பாதையின் பங்காளிகளான இவர்களோடு ஆற்றலுள்ள பெண்களின் சமூக அங்கீகாரமுள்ள எழுச்சி தொடரும் என்பதில் ஐயமில்லை.

மகளிர்தின வாழ்த்துக்கள்

இலக்கிய வித்தகர்.<br>சம்மாந்துறை மஷூறா.<br>நிர்வாக ஆசிரியர்.<br>SRI LANKA PEN CLUB.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இதழாசிரியர் உள்ளத்திலிருந்து...

இனிய நெஞ்சங்களே... உங்கள் அனைவரது வாழ்விலும் என்றும் நிம்மதியும், மகிழ்ச்சியும், தேகாரோக்கியமும் கிடைக்க வேண்டும் எனும் பிரார்த்தனைகளுடன் அஸ்ஸலாமு அலைக்கும். வணக்கம்...

ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பான Srilanka Pen Clubன் வெளியீடான அவரி சஞ்சிகையின் ஒன்பதாவது இதழ் இது. இந்த இதழின் இதழாசிரியையாக உங்களை சந்திப்பதில் ஈடற்ற ஒரு சந்தோஷத்தை நான் அடைகிறேன்... இந்த அமைப்பின் தலைவியும், என் அன்புக்குரிய தோழியுமான இலக்கிய வித்தகர் திருமதி மஷூறா சுஹூறுத்தீன் அவர்கள் இந்த இதழை நீங்கள் பொறுப்பெடுக்கிறீர்களா என்று கேட்ட போது, பெருமிதமாய் உணர்ந்த நான் அதனை எனது இலக்கியப் பயணத்திற்கு கிடைத்த அங்கீகாரமாகவே கருதினேன். மட்டற்ற மகிழ்ச்சியுடன் நான் ஒத்துக்கொண்ட போதிலும் என்னால் செய்ய இயலுமா என்கிற பெரிய வினாக்குறி என் மனக்கண்ணில் தோன்றிப் பயமுறுத்தவும் தவறவில்லை. ஏனெனில் இது எனக்குப் புதிது. ஆனால் அந்தப் பயத்தை போக்கியது தோழியின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு எனக்கு மிகவும் பக்கபலமாய் நின்ற அவரது உதவியினால் இதனை சிறப்பாக உங்கள் முன் சமர்ப்பிக்க என்னால் முடிந்திருக்கிறது. அவருக்கு இவ்வேளையில் நன்றி கூற நான் மிகவும் கடமைப்பட்டிக்கிறேன்.

ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பு... பெண்களால் முடியாதது ஒன்றுமில்லை என்பதை முன்னிறுத்துகிறது எங்கள் அமைப்பின் தனித்துவம். வெறுமனே சமைக்கவும், துவைக்கவும் தான் பெண்ணினம் என்பது மாறி இப்போது எங்கோ நாம் பறந்து விட்டிருந்தாலும்கூட, பெண்ணடிமைத்தனம் என்பது இன்னும் முற்று முழுதாக அழிந்து விடவில்லையென்பதே நிஜம்... இன்றும் கூட எம் வாழ்வில் எத்தனையோ சவால்களை நாம் எதிர்நோக்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம்... நாம் எதிர்நோக்கி நிற்கும் பெரும் சவாலான பாலியல் வல்லுறவு என்பது நம் பெண் குழந்தைகளின் வாழ்வினை மிகப்பெரிய கேள்விக்குறியாகவே ஆக்கி வைத்திருக்கிறது... சின்னஞ்சிறு பாலகிகளைக் கூட விட்டு வைக்காத இந்த காம வல்லூறுகளிடமிருந்து, நம் பாலகிகளைக் கண்கொத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பு போல் கவனித்துக் காக்க வேண்டிய பரிதாப நிலையில் நாம் இருக்கிறோம்... வெறுமனே போகப்பொருளாய் பெண்ணுடம்பைப் பார்க்கும் இந்த நிலை மாறாதவரைக்கும் நம் குழந்தைகளை எப்படிப் பாதுகாப்பது என்பதே ஒவ்வோர் பெற்றமனதின் பரிதவிப்பாகவும் இருக்கின்றது. நெருங்கிய உறவுகளைக் கூட சந்தேகக் கண்கொண்டு பார்க்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம்... மனிதம் தொலைத்து மாந்தருக்குள் மிருகமாய் வாழ்ந்திடும் இந்த மாசுபட்ட மாக்களிடம் இருந்து மாதர்களை மட்டுமல்ல மழலைகளையும் காக்க வேண்டிய பாரிய பொறுப்பு நம் அனைவருக்குமே இருக்கிறது... மாற்றத்திற்கான வழிவகைகளை சிந்திக்க, நமக்கான பாதையை தெளிவாகத் திட்டமிட இந்த வருடமகளிர் தினத்தில் திடசங்கற்பம் கொள்வதோடு மட்டுமே நிறுத்தி விடாமல், நடைமுறைப்படுத்தவும் நாம் முனைவோம், ஒவ்வொரு மாற்றமும் மிகப்பெரிய பிரயாசைக்கு அப்புறம்தான் நிறைவேறுகிறது.

மேலும், இந்த அமைப்பில் இணைந்திருக்கும் பெண்களின் இலக்கிய ஆர்வத்துக்கு களம் அமைத்துக் கொடுக்கும் இந்த இதழுக்கான ஆக்கங்களை சிறப்பான முறையில், தகுந்த நேரத்தில் தந்த அனைத்து சகோதரிகளுக்கும் நன்றி கூறுவதோடு, இந்த இதழ் சிறப்பான முறையில் வெளிவர என்னோடு கரம் கோர்த்து நின்ற அனைத்து உறவுகளுக்கும் என் இதயம் கனிந்த நன்றிகள்... அத்துடன் நான் கேட்டவுடன் தனது ஆக்கத்தை பெருமனதோடு தந்த எழுத்தாளர் சுஜந்தினி யுவராஜா அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றிகள்.

வெறுமனே வாசித்து விட்டு கடந்து விடாமல் குறை நிறைகளை சுட்டிக்காட்டுங்கள். முழுமையான திருப்தியை எதுவும் தருவதில்லை என்பதே நிஜம். குறைகளற்ற முழு நிறைவான ஒன்றை தந்து விடவும் முடிந்துவிடாது. எனவே குறைகளை மனமுவர்ந்து பொறுத்துக் கொண்டு, இடையூறுன்றிய பயணத்தை, இந்த அவரி இதழ் தொடர உங்கள் பெறுமதிமிக்க ஆதரவையும் தாருங்கள். எல்லோர் வாழ்விலும் மகிழ்ச்சியும், மனநிறைவும் கிடைக்க வாழ்த்தி விடைபெறுகிறேன்.

திருமதி. சுஸானா முனாஸ்
இதழாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கு

சிறுகதை

**வி**டியற்காலை மணி 4.45. சமையலறையில் பம்பரமாக சுழன்று கொண்டிருந்தாள் சுபா. காலைச் சாப்பாட்டிற்கு இட்லியுடன் கெட்டிச் சட்னியும் சாம்பாரும் செய்திருந்தாள். கொதிக்கும் எண்ணெயில் கடுகு, வெந்தயம், உழுத்தம் பருப்பு, கறிவேப்பிலை, வெங்காயம் ,கடைசியாக பெருங்காயம் சேர்த்து தாளித்து சாம்பாரில் கொட்டினாள். மதிய உணவுக்காக அரிசியைக் குக்கரில் போட்டு, முருங்கைக் கீரைப் பொரியலும், வெண்டைக்காய் கூட்டு, மீன் குழம்பும் செய்து ஹொட் கேஸில் போட்டு மூடி விட்டு, அப்பளத்தைப் பொரித்து சில்வர் டப்பாவிலிட்டு மூடும் போது வீட்டு அழைப்பு மணி ஒலிக்க, வாசலுக்கு வந்தவள், அப்போது தான் கவனித்தாள், இரவு கார்த்திக் கழற்றிப் போட்ட காலணிகள் மூலைக்கொன்றாக கிடந்தன. அவற்றை உரிய இடத்தில் வைத்து விட்டு கதவைத் திறந்தாள்.பேப்பர் பையன் கொடுத்த நாளிதழை எடுத்துக் கொண்டு கதவை சாத்தி வரவேற்பறை மேசையில் வைத்து விட்டு மீண்டும் சமையலறைக்குள் சென்று, கணவருக்கும், தனக்குமாக பகலுணவை கெரியரில் பரிமாறி எடுத்து வைத்தாள். குளியலறை சென்று, உடைகளைக் கழுவி, குளித்து வெளியில் வரும்போது மணி காலை 7.45. குளித்து அலுவலகம் போக ரெடியாகி வந்த கணவருக்கு உணவைப் பரிமாறும் போது அலைபேசி ஒலித்தது. மறுமுனையில் மனேஜர் ரவி. "சுபா! இன்று கொஞ்சம் நேரத்தோடு வந்திடுங்க! அவசரமா அனுப்ப வேண்டிய டொக்யுமண்ட்ஸ் சைன் பண்ணியாகனும். வந்திடுவீங்கல்ல?" "ஓகே, வந்திடுறேன்" போனை வைத்தவள் பரிமாறப்பட்ட இட்லி சாப்பிடாமல் தட்டிலிருக்க கணவன் இவளையே முறைப்பாக பார்த்துக் கொண்டிருப்பது புரிந்து,"ஏங்க, சாப்பிடாம என்ன பண்ணிட்டிருக்கீங்க" கேட்கவும் " நைட் உன் கிட்ட என்ன சொன்னேன் ரொட்டியும், கோழிக்கறியும் செய்ய சொன்னா, இட்லிய செய்து தொலைச்சிருக்கே" இதை மனுஷன் சாப்பிடுவானா"

அங்கு மனேஜரின் கடுகடு முகத்தை பார்க்காமல் தன் cabin சென்று சீட்டில் அமர்ந்தவள், கிடுகிடுவென வேலைகளை ஆரம்பித்து கணிணியில் மூழ்கிப் போனாள். பகலாகும் போது தலைவலி வேறு குடைச்சல் கொடுக்க, காலையில் நடந்த களேபரத்தில் தான் சாப்பிடவேயில்லை என்பது அப்போதுதான் ஞாபகம் வந்தது. சீட்டில் சாய்ந்து கொஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை மூடி நெற்றியின் இருபுறமும் நீவிக்கொண்டாள். பின் பகலுணவை எடுத்துக் கொண்டு, சாப்பாட்டு அறையை நோக்கி நடக்க , அங்கு கலகலப்பாக பேசிக் கொண்டே நண்பர்கள் சாப்பிடுவதைக் கவனித்தாள்." வா சுபா!" ராதா வரவேற்றதைக் கூட கவனிக்கவில்லை. இவளால் எதிலுமே ஈடுபட முடியாமல் மனம் அலைமோதிக் கொண்டிருந்தது.

மனம் பின்னோக்கி நகர்ந்து அசைபோட ஆரம்பித்தது. படிப்பில் கெட்டியான சுபா வகுப்பிலேயே கூடிய புள்ளிகள் பெற்று முதலாம் இடத்தை எப்போதுமே தனக்கென தக்க வைத்துக் கொண்டு, விளையாட்டுப் போட்டி,பேச்சுப் போட்டி என எதிலும் முன்னணியில் இருந்தவள். ஆசிரியர்களின் அன்புக்குப் பாத்திரமாய் திகழ்ந்து, வாணி விழா,இலக்கிய விழாக்களில் பங்கேற்று தனக்கென ஒரு அடையாளத்தை ஏற்படுத்தியவள். கவிதைகள் எழுதுவதிலும் அதிக ஈடுபாடுடையவள். பல கற்கை நெறிகளைக் கற்றுத் தேறியதோடு, சமையல்கலையிலும் கைதேர்ந்தவள். அவள் சமையலை ஊரே பாராட்டும் "இவ கைப்பக்குவம் யாருக்குமே வராது.என்னமா அசத்துறா" என உறவினர்களும், நண்பர்களும் வழங்கிய பாராட்டுக்களுக்கு இருந்த மதிப்பை சுக்கலாக நொறுக்கிப் போட்ட கார்த்திக், என்றுமே அவள் சமையலைப் பாராட்டியதேயில்லை.மாறாக, உனக்கு ஒழுங்கா சமைக்கவே வராதேர்இந்த குழம்பு என் அம்மா வைப்பது போல் ருசியில்லையே் தங்கச்சி இதைவிட பிரமாதமா செய்வா" இது அவனின் அன்றாட ஆலாபனைகள். ஆரம்பத்தில் வருத்தமாக இருந்தாலும் போகப் போக பழகி விட்டது. காரணம், தன் பக்க நியாயங்களை பேசினாலே அடக்கமில்லாமல் வாயாடுவதாக பழி சுமத்துபவனிடம், தன் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முயற்சிக்காதவனிடம் எதைப் பேசியும் ஆகப் போவது ஒன்றுமேயில்லை எனத் தெரிந்து கொண்ட பிறகு,,அவன் என்ன சொன்னாலும் மௌனமாக இருக்கப் பழகிக் கொண்டாள். அவன் சாப்பாட்டு மேசையில் டம்ளரை, தட்டை, வைக்கும் தொனியே முகத்தில் அறைந்தாற் போலிருக்கும். வாயிலிருந்து வந்து விழும் வார்த்தைகளும் எரியமிலத்தில் தோய்த்து எடுக்கப்பட்டது போல் மனதை சுட்டுப் போகும். எப்படித்தான் வார்த்தை அம்புகள் மட்டும் குறி தவறாமல் இதயத்தைப் பதம் பார்க்கின்றனவோ? சூடான கண்ணீர் கன்னத்தை நனைக்க சுயநினைவுக்கு வந்தவள் யாருமறியா வண்ணம் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அலுவலகத்தில் மனேஜர் மட்டுமல்ல இன்னும் ஓரிருவரும் இவளை மட்டம் தட்ட முயற்சிப்பதையும் பலமுறை அவதானித்து இருக்கிறாள்.என்ன இருந்தாலும், அவர்களால் இவள் போல் நேர்த்தியாக அலுவலகத்து விடயங்களைக் கையாளத் தெரியவில்லை என்பது அப்பட்டமான உண்மை. இது அவர்களுக்கும் தெரியும். ஆனால், ஒரு பெண் தம்மை விட திறமைசாலியாகவோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திசாலியாகவோ இருப்பதை ஜீரணிக்கவோ அங்கீகரிக்கவோ முடியாத ஒரு கும்பல் இந்த நவீன யுகத்திலும் இருக்கத்தான் செய்கிறது.ஆணாதிக்க வர்க்கத்தைச் சேர்ந்த இவர்கள் பெண்ணாகப்பட்டவளின் ஆற்றல்களைத் தமது பாதத்துக்குக் கீழ் நசுக்கிவிடத் துடிப்பவர்கள்.கார்த்திக் இந்த கூட்டத்தில் ஒருவனாய் இருந்தது மட்டுமல்லாமல், எப்போதுமே அவன் பேசும் வார்த்தைகளை குத்தூசியாகவே சுபா மீது விழ வைப்பதில் அசுரனாக இருந்தான்.

மறுநாள் ஞாயிறு விடுமுறை. தூங்கி கொஞ்சம் லேட்டாக எழலாம் என்று நினைத்தவள் எண்ணத்தில், ஒரு லொரி மண்ணை வாரி இறைப்பது போல், கார்த்திக் சொன்னான், "நாளைக்கு லன்ச்சுக்கு என் ஒ.்.பிஸிலிருந்து ஐந்தாறு பேர் வர இருக்கிறாங்க.சீக்கிரமே சமையலை முடிச்சிடு" என வழமை போலவே மெனுவையும் சொல்ல, சரியென தலையாட்டினாள் சுபா. நெய்சோறு, சிக்கன் பொரியல், கத்தரி, சூப், கிழங்குகறி, மரக்கறி செலட், கெரமல் புடிங் என ஒரு லிஸ்ட்டையே போட்டிருந்தான் அவளும் அசராமல் செய்து, குளியலை முடித்து வந்தவள், பரபரப்பாக வரவேற்பறையை ஒழுங்குபடுத்தி சாப்பாட்டு மேசையைத் துடைத்து எல்லா பதார்த்தங்களையும் கொண்டு வந்து வைக்கவும், கார்த்திக்கின் நண்பர் குழாம் வந்து சேரவும் சரியாக இருந்தது.

வந்தவர்கள் சாப்பிட்டு முடித்து சுபாவைப் புகழவும், கார்த்திக்கின் முகம் கறுத்ததை சுபா கவனிக்கத் தவறவில்லை. வந்தவர்கள் நேநீரும் குடித்துப் புறப்பட்டுப் போனதும், அனைத்தையும் துப்பரவு செய்து நிமிரும் போது மணி ஐந்தரை. கார்த்திக் ஒய்யாரமாக சோ.்.பாவில் சாய்ந்தபடி ஒரு ஆங்கிலப் படத்தை ரசித்துக் கொண்டிருந்தான்.

அவள் வேலை பார்க்கும் கம்பெனி விவசாய இயந்திர உதிரிப்பாகங்கள் தயார் செய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் நிறுவனம். அதில் ப்ரொடக்ஷன் மனேஜராக பதவி வகிக்கும் சுபா அவ்வப்போது தன் ஐடியாக்களையும் கொடுத்து கம்பெனி முன்னேற்றத்துக்காக உழைப்பவள். அன்றும் நிறுவன இயக்குனர் முரளி, ஒரு மீட்டிங்கை ஏற்பாடு பண்ணியிருந்தார். நிறுவனத்தின் மற்ற செக்ஷன் ஹெட்களும், சமூகமளித்திருக்க, முரளி ஏற்றுமதி அளவை இன்னும் அதிகரிக்க என்ன செய்வதென்று கலந்தாலோசிக்க ஏற்பாடு செய்திருந்தார்.

பலரும் பலவித யோசனைகளை முன்வைக்க சுபா ஏற்றுமதி செய்யும் இயந்திர உதிரிப்பாகங்களின் பொதி செய்யும் (packing) அளவை சற்று குறைத்தால் ஒரு கன்டெய்னருக்கு மேலதிகமான உதிரிப்பாகங்களை உள்ளடக்கலாம் என்று சொல்ல அந்த யோசனையை முரளி கைதட்டி வரவேற்றுப் பாராட்டினார். ஆனால் பெண்களை கொஞ்சம் குறைவாகவே மதிப்பிடும் மனேஜர் மற்றும் அவருக்கு துதிபாடும் சிலரின் முகத்தில் ஈயாடவில்லை. இந்த யோசனையை மறுத்துப் பேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயல முரளி கையமர்த்தி, மீட்டிங்கை நிறைவு செய்தார். பெண்களின் உணர்வுகளையும் திறமைகளையும் மதிக்கும் முரளி போன்றவர்களால் தான் சுபா இன்னும் இங்கு தொடர்ந்து ஈடுபாட்டுடன் வேலை செய்கிறாள். இல்லையென்றால் பெண்களின் ஆற்றல்களை கண்டுகொள்ள விரும்பாத மனேஜர் மற்றும் சிலரால் எப்போதோ வேலையைத் துறந்திருப்பாள்.

அன்றும் வழமை போலவே அவசரமாக வேலை விட்டுத் திரும்பிக் கொண்டிருக்க, வாகன நெரிசலில் தன்னைக் கடந்து போன காரில் கார்த்திக்கோடு மிக நெருக்கமாக அமர்ந்திருந்த ஒரு இளம்பெண்ணைக் கண்டாள். இப்போது அவள் நினைவில் பல சம்பவங்கள் பளிச்சிட்டு மறைந்தன. மிக சமீபமாக கார்த்திக்கின் நடவடிக்கைகளில் ஒரு சில மாற்றங்களை அவதானித்திருந்தாள் சுபா. போன் அழைப்புக்கு பதறியடித்து ஓடி வருவதும், போனை அடிக்கடி எடுத்துப் பார்ப்பதும், உடை அலங்காரத்தில் அதிக அக்கறை, லீவு நாட்களிலும் வெளியூரில் வேலை எனக் கிளம்புவது, இரவில் நேரங்கழித்து வருவது என ஏகப்பட்ட குளறுபடிகள்.

அதேநேரம், உடல் தேவைக்காக மனைவியின் நெருக்கத்தை தேடும் கார்த்திக், அவளின் உணர்வுகளை என்றும் மதித்ததே இல்லை. பெண் என்றால் கிள்ளுக்கீரையாக நினைப்பவன். அதிலும், மனைவி என்பவள் கணவனின் பாதத்துக்குக் கீழ், கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர வேண்டும். அவளுக்கென்று தனிப்பட்ட ஆசைகள் ஏதும் இருக்கக்கூடாது. எந்த இடத்திலும் அவள் தனது ஆற்றலையோ அடையாளத்தையோ வெளிப்படுத்தக் கூடாது என்று கறாராக சொன்னவன். எப்போதுமே" உனக்கு எதுவும் தெரியாது, உன்னால் எதுவும் முடியாது" இதே பல்லவிதான் .திருமணமாகி இந்த ஐந்து வருடங்களில் நீ சாப்பிட்டாயா என்றோ, உனக்கேதும் தேவைகள் உள்ளதா உனக்கு என்ன பிடிக்கும் இப்படி எதுவுமே கேட்டதில்லை.

இரவு வழமை போலவே தாமதமாக வந்தவன், இவளை வலிந்தழைத்து "நாளையோடு உன் வேலைக்கு ஒரு முழுக்குப் போட்டு வீட்டோடு கிட! நீ வேலைக்குப் போய் ஒன்றும் கிழிக்கத் தேவையில்லை. வெளிய போறதால தானே உன் கண் தேவையில்லாததையெல்லாம் கூர்ந்து பார்க்குது. இனி அதுக்கு அவசியமே இல்லை.வீட்டில் சும்மாதானே இருக்கிறாய்.24 மணிநேரமும் சும்மாவே கிட" எனப் பொரிந்து தள்ளினான்.

நேற்று இவள் அவனை ஒரு பெண்ணுடன் நெருக்கமாக பார்த்ததை அவனும் நோட்டம் விட்டிருக்கிறான் என்பது புரிய "நான் சும்மாவே இருந்தால், வீட்டுவேலைகளை நீங்க வாங்கிப் போட்ட ரொபோ தான் செய்யுதோ?" கேட்டே விட்டாள். ஒரு சிறிய அதிர்வு அவன் கண்களில் எட்டிப் பார்ப்பதைக் கண்டவளுக்கு உள்ளூர லேசாக சந்தோஷம் துளிர்த்தது. குளியலறைக்குள் போய் மேல் கழுவி வந்தவளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்போடு மனதிலும் புத்துணர்ச்சி பரவியிருந்தது.

காலை சீக்கிரமாகவே எழுந்து, குளித்து வாசல் தெளித்து கோலம் போட்டு விட்டு சமையலையும் முடித்து தோட்டத்துப் பக்கம் போய் மூச்சை இழுத்து விட்டு ஆழமாக சுவாசித்து நீண்ட காலத்துக்கப்புறம் இயற்கையை ரசித்தாள். அப்பாவும், அம்மாவும் இருக்கும் வரை "நம்ம சுபா நல்ல பொறுமைசாலி மட்டுமல்ல தைரியசாலியும் கூட. பிரச்சினைகள் வந்தால் தீர்க்கமாக யோசித்து சாமர்த்தியமாக கையாளுவாள்" என்று எல்லோரிடமும் பெருமையாக பேசியதுண்டு. இந்த ஐந்து வருடங்களும் அதிகமாகவே பொறுமை காத்தவள் தான். அத்தைக்கு ஆரம்பத்தில் இவளைப் பிடிக்காவிட்டாலும், போகப்போக இவளின் அன்பும் பொறுமையும், இவள்பால் அன்பு கொள்ள வைத்தன. கார்த்திக் இவளை காயப்படுத்தினால், தட்டிக் கேட்ட மகராசி, போய்ச்சேர்ந்த பிறகு அவன் கடிவாளமில்லாக் குதிரையானான். இனி ஒருத்தி வந்தாலும் அவன் அவளையும் அதே அடிமை சங்கிலியைப் பூட்டிவிட்டு ஏகாதிபத்திய ஆட்சியைத் தொடரத் தான் போகிறான்.

ஒரு வாரமாக பலதையும் யோசித்து, இவ்வளவு வருடங்களும் தன் ஆற்றல்களை ஒடுக்கி வைத்திருந்த இந்த உப்பு சப்பில்லாத வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பதென திடமான ஒரு முடிவிற்கு வந்த சுபா, தன் உடைகள், ஆவணங்கள் கொண்ட பையை வரவேற்பறையில் வைத்து அவனுக்காகக் காத்திருந்தாள். அவன் ரூமிலிருந்து வரவும், சுருக்கமாக தன் முடிவைச் சொல்லி, பதிலுக்கு கூட காத்திராமல் பையை எடுத்துக் கொண்டு கிளம்பியே விட்டாள். கேட் வரை சென்றவள் திரும்பி வந்து தோட்டத்துக் கிளிக்கூண்டைத் திறந்து, கார்த்திக் வளர்த்த கிளி சுதந்திரமாக சிறகடித்து உயரப் பறப்பதை ரசித்தவாறு விமென்ஸ் ஹொஸ்டல் நோக்கி நடக்க ஆரம்பித்தாள். போகும் வழியெங்கும் எல்லாமே புதிதாகத் தெரிந்தன.இனி அவள் தடைகள் தாண்டி சவால்களை எதிர்கொண்டு, தன் ஆற்றல்களால் அகிலம் வெல்வாள்.



வ:்பிரா வ:்பி

**பொன்மொழி**

ஒரு ராணியைப் போல சிந்தியுங்கள். ஒரு ராணி தோல்விக்கு பயப்படுவதில்லை. தோல்வி என்பது மேன்மைக்கான இன்னொரு படிக்கல்லாகும். - ஒப்ரா வின்:ப்ரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணெனும் பேராண்மை

பிறந்திட்ட உயிர்களுள் பெருமையாய் இவள்
அன்பெனும் சொல்லின் அற்புத வடிவமாய்
உயிர்களை தாங்கும் உன்னத பூமியாய்
உதரத்தில் சுமந்து உதிரம்தரும் திருவுருவாய்
தாலியெனும் வேலிக்குள் தனித்துவ மங்கையாய்
வெற்றிக்கு வழிவகுக்கும் ஆசானெனும் ஏணியாய்
தலைமுறையெனும் விதையின் ஆணிவேராய்
தென்றலின் சுகந்தமாய் தீந்தமிழின் சுவையாய்
தியாகத்தின் திருவுருவாய் தீபவொளியாய்
இல்லறம் காத்திடும் குலமகள் வடிவாய்
குழந்தைகள் கற்றிடும் ஆரம்பக் கூடமாய்
அறியாமையை அகற்றிடும் அகல் விளக்காய்
போர்க்களத்தைப் புரட்டிப் போடும் வீரமகளாய்
உடன் பிறப்பாய் பாசத்தின் உறைவிடமாய்
வீரவாளேந்தும் வெற்றி முரசின் இளவரசியாய்
சிகரந்தொட்டு விண்ணை முட்டும் ஏவுகணையாய்
பாரதிகண்ட மாதரெனும் அக்கினிச் சுடராய்
உலகாளும் பெண்ணெனும் பேராண்மைச் சக்தியாய்
தரணிதனில் சாதனைகள் படைத்து தன்னம்பிக்கையோடு
வாழ்ந்திடும் பெண்மை என்றும் இனிதடா



சம்பூரணி [illegible] புவராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாக்கப்பட வேண்டிய சிறுமலர்கள்

## மகளிர்தின சிறப்புக் கட்டுரை

மார்ச் எட்டு - மகளிருக்கான நாள்... உலகம் முழுவதும் இருக்கும் மகளிர் அனைவரும் அவர்களுக்கான ஒரு நாளாக இதனைக் கொண்டாடுகிறார்கள். இந்த நாளில் அனைவராலும் மகிழ்ந்து போற்றப்படுகிறார்கள். கண்ணியப்படுத்தப் படுகிறார்கள். இது பெருமைப்படுவதற்கு உரிய ஒன்றுதான் என்பதில் எந்த மாற்றுக் கருத்துகளும் இல்லை. அடிமைப்பட்டு அடங்கிக் கிடந்த காலம் போய் எல்லாத்துறைகளிலும் சாதிக்கும் பெண்களைப் பார்க்கும் போது பெருமையிலும், உவகையிலும் மனம் துள்ளுகிறது... இன்னும் அடக்குமுறைக்குள் இருக்கும் பெண் சமூகம் ஆங்காங்கே இருந்த போதிலும் கூட பெரும்பான்மையாக விழிப்புணர்வுபெற்ற சமூகமாகவே இப்போது பெண் சமூகத்தைக் காண முடிகின்றது.

எத்தனை தூரம் நாம் முன்னேறி விட்டாலும்கூட பெண்களுக்கெதிரான வன்முறை இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. குறிப்பாக சிறுமிகளுக்கெதிரான பாலியல் வன்முறை அதிகரித்துக் கொண்டே போகிறது... இது குறித்தே இக்கட்டுரையில் நாம் பேச விழைகிறோம்.

பத்திரிகைச்செய்திகளாகட்டும், இணைய வழிச் செய்திகளாகட்டும் எங்கு பார்த்தாலும் பச்சிளம் பாலகிகள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டு, சீரழிக்கப்படும் செய்திகளையே காண முடிகிறது. ஆண் பெண் சேர்க்கை பற்றிய எந்த அறிவும் இல்லாத நிலையிலேயே அவர்களது பெண்மை பறிக்கப்பட்டு வாழ்வு அழிக்கப்படும் இந்த துர்ப்பாக்கிய நிலையை என்னென்பது... காமவெறி பிடித்த வல்லூறுகளினால், சின்னஞ்சிறு மலர்கள் கொய்யப்படும் செய்திகளைக் கேட்கும்போது மனம் பதறுகிறது. உலகம் முழுவதும் இது நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற போதிலும், இலங்கையில் சராசரியாக ஒரு நாளைக்கு 40 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைக்கப் பெறுவதாக அறியக் கிடைக்கிறது.

இங்கே மிகவும் வேதனைக்குரியதும், கண்டிக்க வேண்டியதுமான விடயம் என்னவெனில், நெருங்கிய உறவுகளாலேயே இந்த அவலம் நடைபெறுகிறது என்பது தான். தந்தை, சகோதரன், தாத்தா, மாமா, என்று இந்த நெருங்கிய உறவுமுறைகளில் உள்ளவர்களால் மட்டுமல்ல, ஆசிரியர்கள், அயலவர்கள் என்பவர்களால் கூட இந்த வன்முறை சிறுமிகளுக்கு எதிராக நடைபெறுகிறது என்பதனை பலத்த வலியுடன் சொல்ல வேண்டி இருக்கிறது. இதில் ஆண்குழந்தைகளும் உள்ளடக்கப்படுகின்றார்கள் என்பதும் கவனிக்க தக்கது.

தந்தைகளாலும், தாத்தாக்களாலும், ஆசிரியர்களாலும் கர்ப்பிணிகளாக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையும், மரணிக்கும் குழந்தைகளது எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டு போவதைக் காணும்போது, நம்மில் விழிப்புணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுவது எவ்வளவு முக்கியம் என்பதைப் புரிந்து கொள்வது மிகவும் அவசியம் என்று தோன்றுகிறது. முக்கியமாக ஒவ்வொரு தாயினதும் பிரதான கடமையாக இது இருக்கின்றது. தங்கள் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது ஒரு தாயின் மிக முக்கிய கடமை. அதில் தவறிழைத்தால் நம் குழந்தைகளின் எதிர்காலத்தில் அது மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

ஒவ்வொரு தாயும் தனது பிள்ளைகளின் செயற்பாடுகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகளின் நண்பர்கள், வகுப்பாசிரியர், பாட ஆசிரியர்கள், பாடசாலை செல்லும் வாகன சாரதிகள், மேலதிக வகுப்புகளின் ஆசிரியர்கள் போன்ற விடயங்களில் அதிக எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். சந்தேகப்படும்படியானவர்களை பாரபட்சமின்றி, நமது குழந்தைகளில் இருந்து தூர வைத்தல் அத்தியாவசியம்... வேலைக்குப் போகும் பெற்றோர் எனும் பட்சத்தில் பிள்ளைகளின் பாதுகாப்பில் அதிகூடிய கவனம் தேவை. தாம் விட்டுச் செல்லும்போதும், வந்த பின்னும் பிள்ளைகளின் மனநிலையைப் பற்றி ஆராய்தல் அவசியம்...

அது மட்டுமன்றி பிள்ளைகளுக்கு நல்ல தொடுகை என்றால் என்ன. கெட்ட தொடுகை என்றால் என்ன என்பது பற்றிய தெளிவான விளக்கத்தை அளிக்க வேண்டும். இயல்பான, தடைகளற்ற ஒரு சுமுகமான உறவொன்றை பிள்ளைகளுடன் பேணுவது ஒவ்வொரு தாயினதும் முக்கிய கடமை... தனது தேவைகளை, தனது பயங்களை தடையின்றி தாயிடம் பகிர்ந்து கொள்ளும் சூழ்நிலை உருவாகும் பட்சத்தில், இவ்வகையான பாலியல் வன்முறைகளை நம்மால் இனங்கண்டு தடுக்க முடியும்.

பெரும்பாலும் பெற்றோர் செய்யும் தவறுகளும் இவ்வகையான வன்முறைகளுக்கு காரணங்களாக அமைந்து விடுகின்றன. தந்தையின் போதைவஸ்து பாவனை, குடி என்பவற்றோடு, பிள்ளைகள் செய்யும் சிறு தவறுகளுக்கான அதீத கண்டிப்பு, மற்றைய குழந்தைகளுடனான ஒப்புநோக்கல் என்பவற்றையும் காரணங்களாக சொல்லலாம்... வீட்டில் கிடைக்காத அன்பை வெளியில் தேடும் குழந்தைகள் வெகு சுலபமாக இந்த துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்றனர். எனவே வீட்டுச் சூழலை ஆரோக்கியமாக வைத்திருத்தல் என்பது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாக இருக்கிறது. எதிர்காலச் சந்ததியை ஆரோக்கியமான பாதையில் வழிநடாத்த இது உதவியாக அமையும்.

எது எப்படி இருப்பினும் மலராமலே உதிர்ந்து போகும் இந்த சிறுமலர்களை பாதுகாக்க வேண்டியது நம் எல்லோருடைய கடமையாகவும் இருக்கின்றது. நமது வீட்டை மட்டுமல்ல, சூழலையும் அவதானித்து நம் குழந்தைகளின் வாழ்வைப் பாதுகாப்போம்... காம வல்லூறுகளில் இருந்து நம் பிள்ளைச் செல்வங்களை பாதுகாக்கும் செயற்பாட்டை இன்றே தொடங்குவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்புக் கோடு

சிறுகதை

பழக்கப்பட்ட கண்கள் வழக்கத்துக்கே விழித்துக்கொள்கின்றன. எல்லோரையும் போல அவளுக்கும் துயில்கொள்ள ஆசைதான்... ஆனால் என்ன செய்வது அவளைப் பொறுத்தவரை நேரம் சுருங்கித்தான் விட்டது.நேரம் பார்த்து கெரண்ட் கட்டாகிட்டுது. தஹஜ்ஜத்த கூட நிம்மதியா தொழக்கிடைக்குதா...

பசியால் கதறும் குழந்தை.... பாலூட்டி தொட்டிலில் விட்டாச்சு.

சிமினி விளக்கின் வெளிச்சத்தில், சமையலை ஆரம்பிக்க வேண்டியதுதான். ரைஸ்குக்கரில சமைக்க கெரண்ட் இல்லையே.. கேஸ் குக்கரை ஓன்பண்ணி விரைவாக சமைக்கணும்.. கணவனுக்கு பால்கோப்பி, மாமிக்கு ஹோர்லிக்ஸ். பெரியவனுக்கு பிளேன்டீ. சின்னவனுக்கு லைட்டீ எல்லாம் தயாரித்து .

காலை ஆகாரம்...
தலைய பிச்சிக்கொள்ள வேணும் போல இருக்கும். "காமிலா, எனக்கு இலக்கஞ்சி செய்து தரணும்." இது மாமியார்.
"காமிலா பிரக்பெஸ்ட் தோசையும் சாம்பார் துவையல் செய்ங்க" இது கணவர்.

"மம்மி, எனக்கு ரொட்டியும் கட்ட சம்பலும் வேணும்." இது பெரியமகன்.
"மம்மி, எனக்கு பிட்டு வேணும்." இது சின்னவன்....

இவர்கள் எல்லோருடைய ஆசைகளையும் பூர்த்தி செய்யாவிட்டால் சாப்பிடமாட்டார்கள். இந்த இரண்டு கைகள் எல்லாத்தையும் செய்து முடிக்கணுமே.

அடுத்த நாளுக்குரிய வேலைகளை இரவு விழித்தாவது முடிக்கவேண்டும். பள்ளிக்கூட வேலைகளும் ஹோம் வேக்கா போச்சி. சனி ஞாயிறு லீவு என்று பெயர் மட்டும்தான்

துணி துவைக்கவும். கூட்டிப் பெருக்கவும். விருந்தினர் வருகையும். அதனுடனே காலம்கழியும். ஸ்கூல் விடுமுறை வரட்டும். ஒன்லைன் கிளாஸ் வைக்கணும். பிள்ளை களுக்கு ஒன்லைன்கிளாஸில் ஒன்றித்து ஹோம் வேர்க் செய்யணும்.

லீவு விடும்போதே ஸ்டாப் மீட்டிங்ல பிரின்ஸிபல் சொல்லிடுவாரு. பிள்ளை களுக்கு விடுமுறை உங்களுக்கில்ல. பட் பிள்ளைகளுக்கும் ஒன்லைன் கிளாஸ் நடத்தணும். புரஜக்ட் வேலயெல்லாம் இருக்கு நாங்க கோல் பண்ணினா வரணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாட்டி இங்ரீமண்ட் சைன்பண்ண முடியாது.

என்ன செய்ய வேலை செய்யும் இடத்தையும் சமாளிக்க வேண்டாமா...

வீட்டு வேலைகளில் மூழ்கி இருந்தாலும் ஸ்கூல் வேலைகள் அடிக்கடி ஞாபகத்தில் வந்து குழப்பிக்கொண்டே இருந்தன.

தனக்காக ஊற்றி வைத்த டீ ஆறிப்போயிருந்தது. ஒரே மிடக்கில் வாயில் ஊற்றிக்கொண்டாள்.

பிள்ளை கள் பாடசாலை விட்டு மாலைநேர வகுப்பு முடிய வருபவர்கள். கணவர் மாலை ஆறுமணிக்கு காரியாலயப்பணி முடிய வருபவர்.

எல்லோருக்கும் உணவுப்பொதி தயாரிக்க வேண்டும். அதிலும் விரும்பும் கறிகள் இல்லாவிட்டால் சாப்பாடு திரும்பி வந்து குப்பைத்தொட்டியை நிரப்பும். மாமியார் "பிள்ளைகளுக்கு வாய்க்கு ருசியா கொடுக்கணும். சம்பாதிச்சா மட்டும் போதாது குடும்பத்தையும் பராமரிக்கணும்."

"இங்கயாருங்கப்பா நானே வேல செஞ்சு மாயணும். இஸ்கூலுக்கும் டைமாகுது. கொஞ்சம் இந்த தேங்காய துருவி தாங்களோ..."

தேங்காய் துருவப்பட்டதோ இல்லையோ மாமியார் காமிலாவை துருவி எடுத்திடுவார்.

"ஆமா இவ பெரிய மகாராணி. வெட்கமாயில்ல. ஆம்புளய தேங்கா துருவ வச்சிட்டியே. பாவம் அவன் ஒபீஸ்லயும் போயி என்னா கஷ்டபட்டு வாரான். இந்த கிழவிய தனிய போட்டுட்டு கைப்புள்ளய வளக்க போட்டுட்டு அபாயாவ மாட்டி பேக போட்டு கொண்டு போறதும் வாரதும். ஊருலகத்துல உள்ள டீச்சர் மாரெல்லாம் இப்பிடியா..."

பொண்ணா பொறந்தது பாவமா... இல்ல வாயமூடிகிட்டு இருக்கிறது பாவமா...

எல்லாம் தலைவிதி. இந்த பொருளாதார நெருக்கடியில இரண்டு பேரும் சம்பாதிக்கிறதாலதான் இந்த அளவாவது தாக்கு பிடிக்கிறம். அவங்க மகன் மட்டும்தான் கஷ்டப்படுறதோ... நாங்க தொண்ட கிழிய கத்தி முதல்நாளே பாட ஆயத்தம் பண்ணி படிச்சி கொடுக்கிற வேலமட்டுமா... ஒவ்வொரு நாளும் அத நிரப்பு இத நிரப்பு என்று சுடுது சுடுது மடியப்பிடி என்று பாடசாலைநிர்வாகமும். காரியாலயமும் கசக்கி பிழியிறது வீட்டோட உள்ள அந்த வயசுபோனவங்களுக்கு எப்படித் தெரியும்...

எல்லோருக்கும் அவரவர் பார்சலைகட்டி அவர்களது பைகளில் போட்டாச்சு.

கைபேசி அலறுகிறது வேலைக்காரி "ஹலோ மெடம். எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னக்கி நேரத்தோட வரமுடியாது. நான் லேட்டா வாரன்"

"ஐயோ பாக்கியம், நான் இன்னக்கி கட்டாயம் நேரத்தோட போகணும். இன்னக்கி டீம் வேற வருகுது..." "பெரியநோனாக்கு மருந்துகளையும் கொடுத்திட்டு போங்க சின்னப்பாப்பாவ பால ஊட்டி தூங்க பண்ணிட்டு போங்க."

வேலைக்காரியும் சட்டம் போடத் தொடங்கிட்டாள்.

காசு எடுப்பதிலும், சம்பளத்தில் பாதியை சுரண்டுவதிலும் கெட்டிக்காரி. நாங்க இப்படி பிரின்ஸிபலோட கதைக்க ஏலுமா..?

அன்றொரு நாள் ஓ.எல் எழுதும் மாணவர்களுக்கான பெற்றார் கூட்டம். வேலைக்காரி திடீரென லீவு. குழந்தையை விட்டுப்போக யாருமில்லை வயோதிப மாமியாரை பார்க்கவும் வேண்டும். பாடசாலைக்கு டெலிகிராம் மெசேஜ் அனுப்பிவிட்டு நிற்கவேண்டிய தாயிற்று. அடுத்தநாள்,

அதிபரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"டீச்சர் நீங்கெல்லாம் என்ன நெனச்சிகொண்டிருக்குறீங்க... இப்படி லீவு எடுத்தா பிள்ளைகளிட படிப்பு என்னாகிறது. ட்ரான்ஸ்பர எடுத்துட்டு போயிடுங்க.. இல்ல ரிசைன் பண்ணுங்க.."

காமிலாவின் கண்களில் கண்ணீர் நிறைந்தது.

கல்வி நிருவாகத்துக்கு பொறுப்பான பிரதி அதிபரும் தன்பங்கை செலுத்த வேண்டாமா...

"டீச்சர், உங்கட ஒரு பிள்ளைக்காக நீங்க லீவெடுத்தா இங்க இத்தனை பிள்ளைகளுக்கும் யாரு பொறுப்பு சொல்றது. நாங்களும் பிள்ள வளக்காதவங்களா..."

பாடங்களைகூட ஒழுங்காக நடத்த முடியாத தலைவலி.

தரகர் பிடித்து பணத்தை அளந்து எடுத்த வேலைக்காரி. குழந்தை பராமரிக்க முடியாதென்றாள். மாமியை பார்த்துக்கொள்ள மட்டும் சம்பளம் முப்பதாயிரம் . இரண்டு வயது பிந்திய குழந்தைகள் தான் டேகெயார் சென்றருக்கு அனுமதிப்பதாக சொன்னார்கள். இனி என்ன பண்ணலாம். வேலைக்காரிக்கு பணிந்து போகவேண்டிய நிலை.

அந்த காலை நேரம் இருக்கிறதே... ஏன்தான் விடிகிறது.... என்றிருக்கும்.

"காமிலா, என்னோட பைல கண்டீங்களா.... நீலக்கலர் சேட்ட அயன்பண்ணி வச்சிருக்கா....." கணவர் இப்படி எதையாவது கேட்க தேடி கையில் ஒப்படைக்கும்வரை காமிலா.....காமிலா....தான்.

"மம்மி, என்னோட பென்சில காணல்ல... எனக்கு புதுப் பென்சில் வேணும்." இப்படி ஒருத்தன் அடம் பிடிக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மம்மி. இங்க பாருங்களே நானா அடிக்கிற..."

சண்டை விலக்கி சாமான் பங்கு வைத்து ஸ்கூல் வேனில ஏற்றிவிடுறமட்டும் ஓச்சம்தான்.

"காமிலா, நான் வொஷ்ரூம் போகணும்."

இது மாமி. போனா அரைமணித்தியாலம் வெளிய வரவே மாட்டாங்க....

இன்றைக்கு சுப்பவிஷனுக்கு டீம் வருது. நேரத்தோட போக ரெடியானா....

"ஏ... ஏங்க ஏன்னய கொஞ்சம் பஸ்டொப்ல விட்டுட்டு போங்களே..."

என்றவளை,

"ஆமா நீங்க ரெடியாகி வாரதுக்குள்ள நேரம் சரி ஆபீஸ் கீ என்கிட்ட. பிக்மி போட்டு போங்க.... நான் வாரன்..."

பதிலுக்காக காத்திராமல் பைக் ஸ்டார்ட் ஆகி போகும் சத்தம் கேட்கிறது.

அவசரத்துக்கு உதவும் பக்கத்து வீட்டு பாத்து மாமிய கூப்பிட்டு விசயத்த சொல்லி அவசரமாக ரெடியாகி பஸ்ஸை பிடிக்க ஓடும் போது கால் இடறி செருப்பு அறுந்து போக அதனை சரி செய்து நொண்டி நொண்டி பஸ்ஹோல்டை அடைய முன்பே பஸ் போய்விட்டது.

கால் வலியைவிட மனதின்வலி அதிகமாக... நேரத்தைப் பார்க்க கையில் கடிகாரத்தை கட்ட மறந்திருந்தாள். ச்சே ஹேன் போனையும் எடுத்துவர மறந்துவிட்டாள்.

கணவர் சொல்லிட்டு பறந்தாரு. அந்த காலைநேரத்துல ஒரு பிக்மியும் வராது. ட்ரைபண்ணிட்டு மேசைல வச்ச போன எடுக்க மறந்தது ஞாபகத்தில் வந்தது.

"இன்று எங்கதி அவ்வளவுதான். ஆண்டவனே சீக்கிரமா நான் போய்ச்சேர வழிகாட்டு" மனசுக்குள் பிரார்த்தனை... அல்லாஹ் சுமக்க முடியாத சுமைகளை தரமாட்டான்.

கிறீச்... திரீவீலர்... ஸ்கூல் பிள்ளைகளை ஏற்றிக் கொண்டு வந்தவர். "ஏறுங்க மெடம். அடுத்த சந்தியில விடுறன். அங்கு இன்னொரு பிள்ளய ஏற்ற வேணும்."

சந்தியிலே இறங்க ஏறி நிற்க இடமில்லாமல் மிதிபலகைப் பிரயாணம். கை விடுபட்டால் ரோட்டில்தான். ட்ரபிக் புளொக் ஆமை வேகத்தில் வண்டி நகர்கிறது மனசு திக்... திக்... என்று அடித்துக்கொள்கிறது.

அவளின் அவசரம் சாரதிக்கு புரியவா போகிறது... தரிப்பிடத்தில் இறங்கியவள்... காலை இழுத்து இழுத்து பாடசாலை நோக்கி நடக்கிறாள். வெள்ளைக்கோட்டை கடக்க முடியாமல் ட்ரபிக் பொலிஸ் கைஅப்பியாசம் பண்ணுகிறார். பாடசாலை மணி ஒலிக்கிறது. அது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது தலையில் அடிப்பதுபோல வேதனை.

வியர்க்க விறுவிறுக்க நடந்துசெல்கிறாள். கேட் மூடப்பட்டிருந்தது. பாடசாலை கீதம் முடிய மீள மணி அடித்துஓய, கேட் திறக்கப்பட்டது.

அதிபரின் பார்வை ஆக்ரோஷமான சிங்கத்தின் பார்வை. காமிலாவை அலட்சியப்படுத்தியவராக சிக்னேச்சர் புக்கை மேசைமீது போட்டார்.

சிவப்புக்கோடு எச்சரித்தது... அதன் கீழே ஒப்பமிட்டாள்... ஷோட் லீவு விழுந்தாச்சு.

மனசுக்குள் ஏதோ ஒன்று பந்தாக திரண்டு வருவதுபோல... கால் வீக்கமுற்று வலி எடுத்தது... நெஞ்சுக்குள் சுளீர்...

கண்கள் இருண்டன... கால்கள் தள்ளாடின.. விழப்போனவளை யாரோ கைதாங்கி கதிரையில் அமர வைக்க போகும்போது வீக்கமுற்ற கால் நீலநிறமாகி...

ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்படுகிறாள்... கண் திறக்கவில்லை

காமிலா கண் திறப்பாளா...?



# அழகியின் கனவு

ஆடம்பரக் கனவெல்லாம்
அழுகிப் போயாச்சி
கடனாளியாக தீண்டிய
காலமெல்லாம் ஏச்சி
திடமான கனவுகளோடு
திட்டங்கள் போட்டாச்சி

அன்பால் உலகைச் சுற்றி
ஆரத்த தழுவணும் ஆத்மாக்களை
துன்பமென்ற சொல்லை
துடைத்தெறிந்திடணும்
இன்பமென்ற கோட்டைக்குள்
இன்னிசை ராகம் இசைதிடணும்

வம்புக்கு வழிவிடாது
வாயடைத்து விடணும்
தெம்புத் தேடலின் மூலம்
தேராரோக்கியம் பெறணும்
நிம்மதியென்ற மூச்சை சுமந்து
நீடூழி வாழ வழிவிடணும்

சேவையின் செம்மலாய்
சிறகடித்து பறக்கணும்
தேவையென்றிலா எதையும்
தீண்டா வழிபார்க்கணும்
சுவையான உணர்வு பெற்று
சூழலில் சுகந்தம் பெறணும்

உள்ளத்தடாகத்திலிருந்து என்றும்
உண்மை உதிக்கணும்
கள்ளமில்லா கருணையை
காட்சிப் படுத்தணும்
துள்ளித்திரியும் இளமை
தினமும் என் நினைவாகணும்.



பாரா தாஹிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவியாய் ஒரு பயணம்

துள்ளித் திரியும் கனாக்களுடன்
சில காலம்
அது அள்ளித்தந்த சுகங்கள்
ஏராளம்
கொட்டும் மழையில்
நனைந்ததும்
கும்மாளமாய் அலைந்து
திரிந்ததும்
இப்போதும் ஓரமாயிருந்து இனிக்கின்றன.

இந்நாட்களில் என் பயணம்
தாரமாய் ஒரு தாயாய்
இளமைகள் தொலைந்து
தலைகூட மொட்டையாய்
மெலிதாக இருந்த உடல்
கடும் பருமனாய்
மேனியோ பொலிவிழந்து
பார்ப்பதற்குப் பாட்டியாய்

நான் மட்டுமா இப்படி
நாற்புறமும் பார்க்கின்றேன்
"சிலிம்" என்று
சிறியதாய் இருந்தவள்
"பறள்" போன்று
பெரிதாக மாறியும்
ஒய்யாரமாய் உடுப்பணிந்து மகிழ்ந்தவள்
ஏனோதானோவாய் போட்டுக்கொண்டும்
இருகின்றாள்.

தாரமாய் ஆனபின்
தாயாக ஆகிட்டேன்
ஒவ்வொரு நாளும்
ஓய்வின்றி
உழைத்து நான்
களைத்திட்டேன்.
கூடவே ஒரு தொழிலுக்கும்
சென்றுதான் வருகின்றேன்
எனக்காகவேயன்றி
அனைவர்க்குமாய்
வாழ்கின்றேன்

துணைவியோடு பயணிக்கும்
சிலதுணைகளுக்கோ
அவர்தம்
துயரங்கள் புரிவதுண்டு
புரிந்தாலும்
சில துணைவர்கள்
தூக்கம்போல் நடிப்பதுண்டு

கண்டுகொள்ளப்படும் துணைவியரோ
சரித்திரமாய் எழுகின்றார்
தவிர்க்கப்படும் துணைவியரோ
சமுத்திரமாய் அடங்குகின்றார்

துணைவனுக்கோ அறுபதிலும்
கட்டாய ஓய்வு வரும்
துணைவிக்கோ இங்கே
மண்ணறைதான் ஓய்வு தரும்

துணையாக இருப்பதுவும்
நற்தாயாக வாழ்வதுவும்
சுகமான சுமைகள்தான்
கொடுப்பனவு இல்லாத
ஓய்வற்ற
வேலைகள்தான்

துணைகளுக்கும் தாய்களுக்கும்
விலைகள்தான் இங்கேது
இறையவனின் பொருத்தம்தவிர
வேறு ஏதும் கிடையாது.



முப்லிஹா பிர்தௌஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதவைகளுக்கு மறு வாழ்வளித்த இஸ்லாம்

**இ**ஸ்லாம் ஒரு பூரண வாழ்க்கைத் திட்டமாகும். அது மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சிறந்த வழிகாட்டியாக நின்றிலங்குகின்றது.

உலக வரலாற்றை நோக்கும் போது புராதன காலங்களில் பெண் என்பவள் பெறுமதியற்றவளாக பார்க்கப்பட்டாள். வெறும் போகப் பொருளாக மட்டுமே நோக்கப்பட்டாள். அவளுக்கு ஆன்மா இருக்கிறது என்று கூட யாரும் எண்ணி இருக்கவில்லை. சமுதாயத்தில் எந்த உரிமையும் அவளுக்கு வழங்கப்படவில்லை.

கணவன் இழந்தால் உடன்கட்டை ஏறித் தன்னுயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தாள். பிற்பட்ட காலங்களில் தந்தையின் மறைவுக்குப் பின் மூத்த மகனின் சொத்தானாள். அதன் பின் கைம்பெண் என்று மூலைக்குள் முடக்கி விடப்பட்டாள்.

இஸ்லாம் வழங்கிய மிகப் பெரிய உரிமைகளில் பெண்ணுரிமை முக்கியமானது. இல்லற சாம் ராஜ்யத்தில் அவளை பட்டத்து ராணி யாக்கி அத்தனை உரிமைகளையும் அவளுக்கு சொந்தமாக்கியது இஸ்லாம். அதுமட்டுமின்றி கல்வியுரிமை, சொத்துரிமை, வாரிசுரிமை போன்ற இன்னோரன்ன உரிமைகள் வழங்கி அவளுக்கு விடுதலை வழங்கியது. அத்தோடு மட்டும் நின்று விடாது கணவனை தெரிவு செய்யவும், வணிக நடவடிக்கைகளில் ஈடுபடவும், யுத்தத்தில் பங்கேற்கவும் வாய்ப்பும், சுதந்திரமும், உரிமையும் வழங்கியது இஸ்லாம்.

வாழ்க்கைத் துணையை இழந்தவளே விதவை எனப்படுகின்றாள். இங்கு கணவனை இழந்தவளையும் கணவனால் கைவிடப்பட்டவளையும் விதவை என்றே நோக்க வேண்டியுள்ளது

கணவன் மரணித்த பெண்ணும், விவாகரத்து பெற்ற பெண்ணும், தனது "இத்தா" காலம் முடிவடைந்த பின் மறுமணம் செய்து கொள்ள அனுமதி தந்துள்ளது இஸ்லாம்.

திருமணம் முடிக்காத கன்னிப் பெண்ணைத் திருமணம் செய்ய அவளது பெற்றோரின் அனுமதியை பெற வேண்டும்.அல்லது அக் கன்னிப் பெண்ணின் மௌனமே சம்மதம் எனக் கருதப் படுகிறது. ஆனால் விதவைப் பெண்ணைத் திருமணம் செய்வதாக இருந்தால் அப்பெண்ணின் சம்மதம் கட்டாயம் பெறப்பட வேண்டும் என்று இஸ்லாம் கட்டளை பிறப்பித்துள்ளது.

விதவைகளுக்கு மறுவாழ்வளித்து அவர்களுக்கு உள்ளம் இருக்கிறது. உணர்ச்சிகள் இருக்கின்றன. ஆசாபாசங்கள், எதிர்பார்ப்புகள் இருக்கின்றன என்று கண்டு கௌரவப்படுத்தியது இஸ்லாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் மங்கையர்களுக்கு மறுவாழ்வழித்து மண்ணிலே மாண்போடு வாழ வழிகாட்டிய மகான் எனப் போற்றத்தகு பெருமைக்குரியவராக முஹம்மது நபி(ﷺ) அவர்கள் காணப்படுகின்றார்கள். மிகத் தூரநோக்கான சிந்தனையுடைய இறை மார்க்கம் இஸ்லாம் பலதார மணத்தை அறிமுகம் செய்து வைத்ததும் பாதிக்கப்பட்ட விதவைகள் மறுமணம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலும் தான்

பலதார மணம் என்னும் மாபெரும் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தி உங்களுக்கு விருப்பமான பெண்களை இரண்டிரண்டாகவோ மும் மூன்றாகவோ நான்கு நான்காகவோ மணமுடித்துக் கொள்ளுங்கள். ஆனால் அவர்களிடையே நீதமாக நடந்து கொள்ள முடியாது என அஞ்சுபவர்கள் ஒரு பெண்ணை மாத்திரம் திருமணம் செய்து கொள்ளுங்கள் அல்லது நீங்கள் உங்கள் கைகள் சொந்தமாக்கிக் கொண்ட பெண்களையே மனைவியாக்கிக் கொள்ளுங்கள் நீதி தவறாமல் இருப்பதற்கு இதுவே மிக நெருக்கமானதாகும்

(அல்குர்ஆன் 04:03)

ஆண்மையின் வல்லமை,

சொத்துக்களை பரவலாக்கல், சமூக சீர்திருத்தமும் அக்கறையும், சமூக ஒழுக்கம் கலாசார பண்பாட்டு மேலாண்மை ,சமூக பாதுகாப்பு போன்ற சமூகத்தின் மீதான அதிக அக்கறையால் தான் இஸ்லாம் பலதார மணத்தினை அங்கீகரித்துள்ளது. ஆனாலும் நீதமாக நடக்க முடியும் என்றால் மாத்திரமே ஒரு ஆணுக்கு பலதாரங்களை தனதாக்கிக் கொள்ள அனுமதியும் வணங்கியுள்ளது இதற்கு முன்மாதிரியாக நடந்தவர்கள் தான் மாநபி முஹம்மத்(ஸல்) அவர்கள்.

தனது வாலிபப் பருவத்தில் தன்னை விட வயதான மூத்த கைம்பெண் அன்னை கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்களை மணந்து அவரின் வாழ்க்கை பயணத்துக்கு வழிகாட்டி இருக்கின்றார்கள் வள்ளல் நபி அவர்கள்.

அது மட்டுமின்றி விதவைப் பெண்களின் பிள்ளைகளை பொறுப்பேற்க வேண்டும் அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் அநாதைகளை பராமரிக்க வேண்டும். அரவணைக்க வேண்டும் என்று பெரு நோக்கில் அன்னை சௌதா அவர்களையும் ஏனைய மனைவிமார்களையும் விதவைகளுக்கு மறுமணம் மறுவாழ்வழிப்பதற்காகவே நபி அவர்கள் மணந்து இந்த சமுதாயத்துக்கு வழிகாட்டினார்கள்.

கணவனை இழந்த கைம்பெண் சமூகத்தில் இன்றைய நவீன யுகத்தில் கூட கையாலாகாதவளாக மதிக்கப்படுகின்றாள். மங்கள காரியங்களில் முன்னே நிற்க முடியாமல் தூரமாக்கப்படுகின்றாள். தனது பிள்ளைகளின் திருமண நிகழ்வுகளில் கூட அவள் ஓரங்கட்ட படுகின்றாள். இவ்வாறு இன்றைய கலியுகத்திலும் பெண்கள் மிதிக்கப்படுகின்ற இந்த படு மோசமான செயலுக்கு சாவு மணி அடிப்பதற்காக நபி அவர்கள் விதவைகளுக்கு வாழ்வளித்து முன்னுதாரணமாக நின்று அவர்களுக்கு உரிமை வழங்கி கௌரவித்து இருக்கின்றார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதவைப் பெண் சமுகத்தில் மிகவும் நெருக்கடிகளுக்கு ஆளாகின்றாள்.

- விதவை என்றாலே அவளுக்கு உதவிசெய்யும் தோரணையில் பல்வேறு பாலியல் நெருக்கடிகள், துஷ்பிரயோகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.
- மனைவியை இழந்த கணவனை ஒரு கண்ணோட்டத்திலும் , கணவனை இழந்த மனைவியை வேறொரு கண்ணோட்டத்திலும் சமூகம் பார்க்கிறது.
- வறுமை மற்றும் பாரிய பொருளாதார நெருக்கடியால் தவிக்கிறார்கள
- கலாசார, ஒழுக்கம் சார்ந்த சீர்கேடுகள் ஏற்படுகின்றன.
- விபச்சாரம் போன்ற இழிந்த செயலைச் செய்ய தூண்டப்படுகிறார்கள்.
- வெளிநாடுகளில் விற்கப்படுகிறார்கள்.
- ஏமாற்றப்படுகிறார்கள்.
- நிம்மதியாக, பாதுகாப்பாக வாழும் சூழல் காணப்படவில்லை.
- உள நெருக்கீடு, மன அழுத்தம் என்பவற்றால் பாதிப்புற்ற நிலையில் தற்கொலைக்கும் ஆளாகிறார்கள்.
- பிள்ளைகள் பாதிக்கப்பட்ட நிலையில் திசைமாறி, நெறி பிறழ்ந்து, சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

ஒரு பெண் பாதிக்கப்பட்டால் ஒரு சமுதாயமே பாதிக்கப்படும். ஒரு ஆணைப் போலவே பெண்ணுக்கும் உடலியல் தேவைகள் இருக்கின்றன. ஆத்மார்த்தமான அன்புத் தேவை, பாதுகாப்பு, வழிகாட்டுதல்கள் போன்ற தேவைகள் உள்ளன.

பெண்ணியல்வாதம் பேசி, என்னால் எல்லாம் முடியும் என்ற இறுமாப்புடன் வாழத் தலைப்படும் பெண்களின் மறுபக்கம் துன்பியல் நிறைந்ததாகவே இருக்கும்.

ஒரு பெண் எத்தனை மனோவலிமையுடன் இருந்த போதிலும், துணிச்சல் நிறைந்தவளாக இருந்த போதிலும் அவளால் சமூகத்தில் தனித்து வாழ்வதென்பது ஒரு இயலாத செயலாகவே நோக்கப் படுகிறது.

எனவே தான் ஒரு பெண் எதிர் நோக்கும் அத்தனை நெருக்கடிகளையும் கவனத்தில் கொண்டு தூர நோக்குள்ள இஸ்லாம் 1445 ஆண்டுகளுக்கு முன்னரே ஒரு பெண்ணின் உடல், உள, சமூக, பாதுகாப்புத் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் விதவைகளுக்கு வாழ்வளித்து முன்னுதாரணமாக திகழ்கிறது.

அல்ஹம்து லில்லாஹ்



**பொன்மொழி**

எப்போதும் புன்னகையுடன் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொள்வோம். ஏனென்றால் புன்னகையே அன்பிற்கான தொடக்கம்.

~அன்னை தெரசா~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியவித்தகர் சம்மாந்துறை மஷூறாவுடனான நேர்காணல்.

செவ்வி



சம்மாந்துறையை பிறப்பிடமாகவும் தற்போது மருதமுனையை வசிப்பிடமாகவும் கொண்டவர் சித்தி மஷூறா சுஹூறுத்தீன். 1979இல் மஷூறா ஏ மஜீத் என்ற பெயரில் வானொலியில் எழுத ஆரம்பித்து இலங்கையின் தேசிய பத்திரிகைகள் அனைத்திலும் பல சஞ்சிகைகளிலும் எழுதியவர். கவிதை, சிறுகதை கட்டுரை, நாடகம், பாடல், வில்லுப் பாடல், பிறைப்பாடல், தாளலயம், பேச்சு, சித்திரம், கைப்பணி, சஞ்சிகை என பல்துறைகளிலும் தடம் பதித்தவர்.

மாவடிப்பள்ளி கமு/அஷ்ரப் மகா வித்தியாலத்தில் ஆசிரியையாக பணிபுரியும் இவர் மொழி தேர்ச்சியிலும் படைப்பாக்க திறனிலும் மாணவர்களை சிறந்த அடைவைப் பெறச் செய்தவர்.

2017இல் கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய “கலைஞர் சுவதம்” விருது உட்பட இலக்கியத்திற்காக 13 விருதுகள் பெற்றிருக்கின்றார். 2021 இல் நதிகளின் தேசிய கீதம் எனும் இவரது சுய கவிதை தொகுதியும் வெளிவந்துள்ளது. அது தவிர 63 முஸ்லிம் பெண் கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய சுட்டு விரல் கவிதைத் தொகுதியை தொகுத்து தந்திருக்கிறார். இது இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண் கவிஞர்களின் தொகுப்பு என்பது குறிப்பிடத்தக்கது. 2023ல் SLPC உறுப்பினர்கள் இருபத்து இரண்டுபேரின் மொழிபெயர்ப்புக் கவிதைகளை இமயம் தழுவும் இறக்கைகள் என்ற பெயரில் தொகுதியாக்கி தந்தார். இலங்கையின் முதலாவது மொழி பெயர்ப்புக் கவிதை தொகுதி அல்லது பெண்களின் மொழி பெயர்ப்புக் கவிதைத் தொகுதி இதுவாகும் என நினைக்கிறேன். இக்கவிதைகளை மொழிபெயர்த்தவர் SLPC போசகர்களுள் ஒருவரான கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபி என்பது குறிப்பிடத்தக்கது.



கவர் ஸ்டோரி

தவிர SLPC அமைப்பின் அங்கத்தவர்களில் பதினாறு எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து உலகம் முழுதும் எங்கள் கதைகள். என்ற சிறுகதைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாசிப்பு பழக்கம்தான் என்னை எழுத்துலகிற்கு இட்டுச் சென்றது. எங்கள் வீட்டிலே தாய்க்கு வேறாகவும் தந்தைக்கு வேறாகவும் புத்தகப் பெட்டிகளிருக்கும். இருவரிடமும் ஒரே வகைப் புத்தகங்கள்கூட இருக்கும். பெண்புத்திமாலை, மஹ்சூக் மாலை, மும்மணி மாலை, ஞானமணிமாலை, மகிழ்மணிமாலை, சலவாத்துமாலை, வெள்ளாட்டி மஸ்அலா, ஸைத்தூன் கிஸ்ஸா தமீமுல் அன்சாரியின் கிஸ்ஸா, காசீம் படைப்போர் மரணவிளக்கம், குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள், அகத்தியர் அருளிய ஆயுர்வேதம், தலைப்பாத்திஹா... இப்படியெல்லாம் மிக சிறுவயதிலிருந்தே திருட்டுத்தனமாக வாசித்தேன். வீட்டிலே இரண்டு மூன்று தினசரிகள் வாங்குவார்கள். மித்திரனை திருட்டுத் தனமாகவே வாசிப்பேன். அகத்தியர் அருளிய ஆயுர்வேதம் செய்யுள் வடிவ மருத்துவ நூல். நான்காம் வகுப்புவரை மட்டுமே படித்த தந்தை எப்படி இதனை விளங்கி வைத்தியம் செய்தாரென்பது எனக்கு இதுவரை புரியாத புதிர்தான். தெருவில் குப்பைகளில் கிடக்கும் தாள்களைக்கூட பொறுக்கி வாசிக்கும் பழக்கம் என்னிடமிருந்தது. வாசிப்புதான் என்னை எழுத்துலகிற்கு அழைத்து வந்தது.

தொகுதியையும் வழங்கவிருக்கிறார். இதுவே முஸ்லிம் பெண்களின் முதலாவது சிறுகதைத் தொகுதியாகும். எண்பதின் ஆரம்பத்திலிருந்து முப்பதுக்கும் மேற்பட்ட சஞ்சிகைகள், வெளியிட்டுள்ளார்.

2021 ம் ஆண்டு முஸ்லிம் பெண் கவிஞர்களை இணைத்து Srilanka Pen club என்ற ஆற்றலுள்ள முஸ்லிம் பெண்களின் அமைப்பை ஸ்தாபித்தார். இதோ இவருடனான செவ்வி...

**கவிஞர், எழுத்தாளர், பாடலாசிரியர், ஓவியர், பத்திரிகையாளர், நாடக ஆசிரியர், கைப்பணியாளர், பேச்சாளர் என பன்முக திறமைகளை கொண்ட உங்களின் இலக்கிய பிரவேசத்தை பற்றி அறிய ஆவலாக உள்ளோம்.**

**அந்நாட்களில் பல சவால்களுக்கு முகம் கொடுத்து இலக்கியவானில் தடம்பதித்த உங்கள் அனுபவங்களை எமது வாசகர்களுக்காக பகிர்ந்து கொள்வீர்களா?**

இன்று போல் அன்று பெண்களுக்கு சுயமாக இயங்குவதென்பது மிக சவாலான விடயம். ஆண் கவிஞர்களின் அறிமுகம்கூட சமூகத்தில் வித்தியாசமாகவே நோக்கப்படும் சந்தர்ப்பமிருந்தது. தவிர எழுத அனுமதித்தால் படிப்பு பாழாகிவிடும் என்ற தவறான மனப்பாங்கும் இருந்து வந்தது. எழுத்துப் பிரவேசம் படிப்பிற்கு தடையில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை எனது பெற்றோருக்கு எடுத்து சொல்லி எனக்கு வழிகோலியவர் அமரர் வீ ஆனந்தன்.

பத்திரிகைகளில் ஆக்கங்கள் பார்த்து பெயரறிந்து கொண்டு தன்னை எழுத்தாளர் என அறிமுகம் செய்து கொண்டு திடீரென யாராவது கவிஞர் வந்து நிற்பார். அதே பெரிய சவாலாயிருந்தது.

எழுதுவதோடு சஞ்சிகையும் வெளியிட்டுக் கொண்டிருந்தேன். காலாண்டு சஞ்சிகையாக, நிறைமதி என்ற பெயரில் கையெழுத்து சஞ்சிகையாக தொடங்கி, ரோணியோவில் இருபத்து இரண்டாவது இதழோடு முடிவுற்றது.

கைபேசி தொலைபேசி இல்லாக்காலத்திலும், தொடர்பாடல்களில் குறையிருக்கவில்லை. கையெழுத்துப் பிரதி ஊர் ஊராக சுற்றி மீண்டும் கைக்கு வந்து சேரும். வாசகர் கருத்துக்களுக்காகவே, பின்புறம் எழுதுவதற்கு தாள்கள் விடப்பட்டிருக்கும். மறக்க முடியாத என்னைப் புடம்போட்ட அனுபவங்கள் அவை.

**படைப்புகள் காலத்தின் கண்ணாடி என்பதற்கமைய உங்கள் படைப்புகள் ஏதாவது சமூக மாற்றத்தை நோக்கி உள்ளனவா. ஒரு பேனாவினால் சரித்திரத்தை மாற்ற முடியும் என்பார்கள். இன்றைய காலத்தில் இவற்றை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

மாற்றம் ஒன்றே மாறாதது. எழுத ஆரம்பித்தபோது எனக்கு எந்த இலக்குகளும் இருக்கவில்லைத்தான். ஆற்றலை வளர்த்துக் கொண்டதும், என் எழுத்திற்குரிய இலக்கினைத் தீர்மானித்துக் கொண்டேன். சமூகத்தில் அனைத்து வகையிலும் இன்னலுறும் பெண்களுக்காக, குரல் கொடுப்பதென்றும் பெண்களுக்கு அவர்களை அவர்களே உணரச் செய்வதும் என் எழுத்தின் பிரதான நோக்கமாக வரையறை செய்து கொண்டேன். என் தனியொருத்தியின் பேனாவால் பாரிய மாற்றத்தை நிகழ்த்திவிட முடியாது என்பதை இனம் கண்டபின்பே பெண்களை ஒருங்கிணைத்து பெண்களுக்காக நகர்வதென தீர்மானித்தேன். என்னுடை எவ்வகை படைப்புகளாகட்டும். எதை நீங்கள் வாசித்தாலும், பெண்களின் பிரச்சினைகள் பற்றிப் பின்னப்பட்டிருப்பதைக் காணலாம்.

**இலக்கிய உலகில் தனக்கென ஓர் இடத்தை தக்க வைத்துள்ள நீங்கள் Srilanka pen club என்ற whatsapp குழுமத்தை ஆரம்பிக்க காரணம் யாது?**

ஆற்றலுள்ள பெண்கள் அனேகம்பேர் வீட்டிலே முடங்கிக் கிடக்கின்றனர். ஒரு பெண்ணுக்கு கல்வியிருந்தால், அந்த குடும்பமே சிறப்பாக விளங்கும். பல பெண்களுக்கு, தமது ஆற்றல்களை வெளிப்படுத்தும் வழிகளும் தெரியாது. இதுவரை காலமும் பல பெண் எழுத்தாளர்களின் சாரதிகளாக ஆண் எழுத்தாளர்கள் சிலர் தான் இருந்து வந்திருக்கின்றனர். பெண்களின் ஆற்றல்கள் சுயமிழந்த நிலைதான். கலங்கரை விளக்கமில்லாமல் விமானங்கள் முட்டிக் கொண்டு சாய்கின்ற சமாச்சாரங்களும் பெண்களுக்கு நடந்திருக்கிறது. srilanka pen clubஐ ஒரு கலங்கரை விளக்கமாகவே ஆரம்பித்தேன். இன்று இந்த அமைப்பே, என் குடும்பமாகி விட்டது.

**Srilanka pen club இன் ஸ்தாபகராக உள்ள நீங்கள் அதன் ஆரம்பம் பற்றியும் அங்கத்தவர்கள் பற்றியும் கூற முடியுமா?**

நிச்சயமாக. 1980 களின் முற்பகுதியில்தான், இந்தப் பெயரில் ஆரம்பித்தேன். படிக்கிற காலம். ஆனால் டிஜிட்டல் காலமில்லை. பென்கிளப் கனவினை என்னுள் விதைத்தவர் என்னன்புக்குரிய வீ. ஆனந்தன் அண்ணாச்சி. இது என் நீண்டகாலக் கனவு. செயற்படுத்துவதில்தான் பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதங்கள் சவால்கள் கொரோனாக் காலத்தில் பாடசாலை லீவு நல்ல சந்தர்ப்பமாய் அமைந்தது. டிஜிட்டல் தொழினுட்பம் சாதகமாய் அமையுமே என்ற ஞானோதயம் ஏற்பட்டது. முதலில் தோழிகளை இணைத்துக் கொண்டேன் முதலில் ஹுனுப்பிட்டி கமர்ஜான்பீபீ அடுத்து திருமலை மர்ளியா சக்காப் இருவருமே இதுவரை எனது வலது கரங்களாக ஊக்குவித்துக் கொண்டேயிருக்கின்றனரென்பது மேலதிக தகவல்.

என்னால் முடியுமென்ற நம்பிக்கையை என்னுள் விதைத்துக் கொண்டிருப்பவர்கள் அவர்கள். பின்னரும் சிலர் இவ்வாறு இயைந்து போகின்றனர். அனைவர் பெயரையும் சொல்வதில் விடுபடுபவர்களுக்கு சங்கடமேற்படலாம்.

தோழிகளை இணைத்துக் கொண்டபின் முகநூலில் எழுதும் பெண் எழுத்தாளர்களை பெண்தான் என உறுதிப்படுத்திய பின் இணைத்துக் கொண்டேன். அதுபெரும் சவால்.

உண்மையில் பெண்களின் கவிதைகளை தொகுக்கும் நோக்குடனேயே இணைத்துக் கொண்டேன். தொகுதியை ஒரு அமைப்பின் பெயரால் வெளியிடுவது சிறப்பு என யோசித்தேன். Srilanka pen club விழித்துக் கொண்டது.

இன்று நாடு முழுவதும் இந்த அமைப்பிற்குள் அகமகிழ்கிறது. ஆற்றல்களை வளர்ப்பது என்பதற்கு அப்பால் அன்புதான் செழித்தோங்கியிருக்கிறது. நட்பில் திளைத்து அழுக்காறுகள் அகற்றி ஒரே குடும்பமாக நேசத்தில் கட்டுண்டு கிடக்கிறோம். பொறாமை என்ற ஒன்று இங்கு செயலிழந்திருப்பது தான் பெரு வெற்றியாக களிக்கிறேன். மனசில் விகற்பமின்றி ஆளையாள் பாராட்டுவதில் போட்டியிடுகிறார்களே. இது என்ன விந்தை! எந்த மந்திரம் நம்மை அன்பில் கட்டிப்போட்டது. ஒருத்தருக்கொருத்தர் உதவிக்கரம் நீட்ட அனைவரும் தயார் நிலையிலிருக்கிறார்களே. இறைவனின் திருப்பொருத்தமிருக்கிறது.

நம்மவர்கள் தமதாற்றல்களை அள்ளிக் கொட்டுகிறார்களே எந்த விடயத்திலும் அபாரமான திறமைகளை காணக்கிடைக்கிறதே காணுந்தோறும் ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தாயின் மனநிலையில் புளகாங்கிக்கிறேன் மாஷா அல்லாஹ் பெண்களுக்கான எனது கனவுகளுக்கு, இவர்கள் நிச்சயம் உயிர்கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை நிறையவே உண்டு.



முஸ்லிம் பெண் இலக்கியவாதிகளுக்கு களமாக அமைந்துள்ள srilanka pen club இன் தற்போதைய செயல்திட்டங்கள் வளர்ச்சி பற்றி அறிய ஆவலாக உள்ளோம்.

தற்போது நூல் வெளியீடுகளிலேயே கவனம் தங்கியிருக்கிறது.

ஒரு எழுத்தாளனின் இருத்தலென்பது அவனது வெளியீடுகளிலேயே தங்கியுள்ளது. அவன் இறந்த பின்பும் அவனது பெயர் நிலைத்திருக்க வெளியீடுகள் தேவை. பிற்கால சந்ததியினர் இவ்வாறான ஒரு எழுத்தாளர் வாழ்ந்தார் என்ற வரலாற்றை அறியவும் வேண்டும். அந்த சந்தர்ப்பம் நமது பெண்களுக்கும் கிடைக்க வேண்டுமென அவாவுறுகிறேன். எனவே கூட்டுத் தொகுதியாகவேனும் வெளியாக வேண்டும்.

அடுத்து எம்மவர்களது படைப்பாற்றலுக்கு களமமைக்கும் முயற்சியாக இந்த அவரி வெளிவருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் மூன்றாவது மாநாட்டையும் வெற்றிகரமாக நடத்தி முடித்த உங்களை வாழ்த்துவதோடு Srilanka pen club இன் எதிர்கால திட்டங்கள் பற்றிய விடயங்கள் இதன் சமூகப் பங்களிப்புகள் என ஏதேனுமுண்டா?

அவசியமான ஒரு கேள்வி.



பெண்களின் சக்தி சாமான்யமானதில்லை. அவர்கள் முயற்சித்தால் தங்கி வாழ்வோராக இல்லாமல் சுயமரியாதையோடு வாழ நிச்சயம் முடியும். இந்த அமைப்பை ஒரு நிறுவனமாக மாற்றி அந்த நம்பிக்கையையும் கொடுக்க வேண்டும். சமூகத்தில் கணவனால் பிள்ளைகளால் கைவிடப்பட்ட திருமணமேயாகாமல் பிறரில் தங்கி வாழ்கிற பெண்களை ஓரிடத்தில் சேர்த்து ஒரு தொழில் முயற்சியைத் தொடங்கி அவர்களே நிர்வகித்து அவர்களே அனுபவித்து ஒருவருக்கொருவர் அனுசரணையாக குழுமமாய் சேர்ந்துவாழ வழியமைக்க வேண்டும் என்பது என் பேரவா. இறைவன் அருள் பாலிக்க வேண்டும்.

அதற்கான பெரிய சவால் நிதிதான்.

அடுத்து எனது புத்தகங்கள் அனைத்தையம் ஒன்றிணைத்து பென்கிளப் நூலகமொன்று அமைக்க வேண்டும். அடுத்தது srilanka pen club ஐ ஒரு வெளியீட்டு நிறுவனமாகவும் மாற்ற வேண்டும். இப்போது நமது அமைப்பிற்கென்று ஒரு லெப்டப்கூட இல்லாத நிலையில்தான் வெளியீட்டு முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம்.

புதியவர்களை இணைத்துக் கொள்வதில் நிபந்தனைகளுண்டா? இணைய விரும்புவோர் எவ்வாறு தொடர்பை ஏற்படுத்த வேண்டும்?

இலங்கையிலும் இலங்கைக்கு அப்பாலுமுள்ள ஆற்றலுள்ள அனைத்து முஸ்லிம் பெண்களும் இணையலாம். இலக்கியம் கலைகள் மட்டுமன்றி எத்தகைய ஆற்றல்களுக்கும் களமுண்டு. மருத்துவம், விவசாயம், உளவியல், தையல், மனையியல், கைத்திறன்கள், தொழினுட்பம், பாடல் என எத்தகைய திறமைகளுள்ளவர்களும் குறைந்த பட்சம் ஆர்வமுள்ளவர்களும் கூட இணையலாம். **+94770696559** என்ற வாட்சப் நம்பருக்கு விண்ணப்பிக்கலாம்.

நிபந்தனை என்றால் முரண் நடத்தைகளோ முரண் குணங்களுள்ளவர்களோ இணைய முடியாது.

பல வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் இந்த செவ்வியை திறம்பட நடாத்த ஒத்துழைத்த உங்களுக்கு வாழ்த்துக்கள். தான் மட்டுமே முன்னேற வேண்டும் என நினைக்கும் காலகட்டத்தில் நீங்கள் திறமைகளை இனம் கண்டு அவர்களுக்கு உரிய களம் அமைத்து ஊக்குவித்து அவர்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள உங்களைப் போன்றவர்கள் எமது சமூகத்திற்கு கிடைத்த பொக்கிஷங்கள் எனலாம். அத்தோடு மற்றவர்களுக்கு உதாரணமாகவும் முன்மாதிரியாகவும் இருக்கின்றீர்கள். இந்தப் பண்பை மற்றவர்களிடம் காண்பது அரிது. உங்கள் Pen club அமைப்பு சர்வதேச மட்டத்தில் விரிவாக வேண்டும் என வாழ்த்துவதுடன் உங்கள் எதிர்கால இலட்சியங்கள், சமூகப் பணிகள் சிறந்தோங்க வாழ்த்தி விடைபெறுகிறேன்.

அஸ்ஸலாமு அலைக்கும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்யாணக் கனவுகள்

இமைக் குடைக்குள் இரு நிலவு...
அமைத்திடும் பல வண்ணக் கனவு...

அழகி அவள் அலைபாயும் குழலாய்..
பழக நயந்திடும் அகச் சூழலும்...

முக்காடிட்ட முழுமதியாய் முகமும் ஒளிதீட்ட...
நிக்காஹிலே பழுதின்றி வாழ்வமைய வழிகாட்ட...

விரிந்த தாமரையாய் கரங்கள் ஏந்த...
சொரிந்திட இறையிடம் வரங்கள் ஏங்க...

மணக்கும் மணக்கோலம் மகிழ்வுடன் பூண...
மன்னவன் அருகிலே நெகிழ்வுடன் நாண...

மருதாணி வாசத்தில் மனமும் மயங்க...
உருவான பாசத்தில் தினமும் உவக்க...

பெற்றோரின் விழிகளில் ஆனந்தம் பொங்க...
பெற்றிட்ட வழியிலே இன்பங்கள் தங்க...

கொடியான இடையில் குழந்தைக்கனிகள் தரிக்க...
செடியதுவும் மரமாக பூத்துச் சிரிக்க...

கணவனின் அன்பதுவாய் இறையருள் இனித்திட...
குணமான பண்பதனால் மனமும் பனித்திட...

கண்டிடும் கல்யாணக் கனவுகள் ஆயிரம்...
கொண்டிட நல்வாழ்வு இதுவே பாயிரம்...





பஸ்லா பர்சான்
காத்தான்குடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ.்.பீரா வ.்.பியின் "புள்ளியில்லாக் கோலம்" ரசனைக்குறிப்புகள்

கொழும்பு மாநகரைச் சேர்ந்த சகோதரி வ.்.பீரா வ.்.பி அவர்களின் ஹைக்கூ கவிதைகள் தொகுப்பு நூல் அண்மையில் வாசிக்கக் கிடைத்தது. அது அற்புதமான ஆச்சரியம் தரும் விடயங்களை உள்ளடக்கியதான ஒரு அழகிய கவி நூல். புத்தகத்தைக்கையில் எடுத்தவுடன் அதன் அழகிய அட்டைப்படமே முதலில் கண்ணுக்கு விருந்தாகி விடுகிறது.



உள்ளே ஆக்கங்களோ நம்மை வியக்கவும், ரசிக்கவும், ஆச்சரியப்படவும் வைக்கின்றது. அதற்கு சான்றாக அவரின் விரல்களின் (அழகிய கோலமான) எழுத்துக்களே உயிரோட்டம் மிக்கவையாக இருப்பது சிறப்பு.

"முத்தமிழ் கலசம்" சஞ்சிகையின் ஆசிரியரான இவர்களின் கன்னி மலர்வெளியீடு. இது.

ஒரு நூல் வெளியீடு ஒரு பிரசவத்திற்குச் சமம் என்பதை எழுத்துலகே நன்கு அறியும். பிரசித்திபெற்ற எழுத்தாளர்களின் ஆசிச்செய்திகளும், தமிழ் நெஞ்சம் அமீன் சேர்(பிரான்சு) அவர்களின் வாழ்த்துப்பாக்களுடனான ஆசிச்செய்தியும் இந்தநூலுக்கான மணி மகுடமாகவே விளங்குகிறது.

128 பக்கங்களில் 365 அழகிய ஹைக்கூக்கள் இந்நூலில் மிளிர்வது இலக்கிய சுவைஞர்களுக்கான நல்விருந்து. ஈரமான இதயத்திலிருந்து ஆழமான பல கருத்துக்கள் மூன்றே வரிகளில்...

இது என்ன மாயம்...

இலக்கியம் என்பது வேறல்ல. இயற்கையின் பிரதிபலிப்பு. கலைத்துவத்தின் காலக்கண்ணாடி. இதனை எடுத்துச்செல்ல வியத்தகு படைப்பாளிகளால் மட்டுமே முடிகிறது. ஆச்சரியம், அழகு, கருத்தாழம் இவரின்நூலை வாசிப்பவர்களுக்குப் புரியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அன்றாட வாழ்வில் கண்ணில் காணும் நிகழ்வுகள், சமூக ஊடுருவல்கள், காலக்கண்ணாடியாக மூன்றே வரிகளில் அனுபவப் பகிர்வுகளாக மிளிர்வது தெளிவு.

குழந்தைக்கு சோறூட்டும் தாய்
அருகில் வாய் திறக்கும்
பசித்த காகம்.

ஆஹா... அருமை...

சாப்பிட அடம்பிடிக்கும் குழந்தைகளை காலங்காலமாக காக்கா காட்டி சோறூட்டுவது தாய்மாரின் வித்தை . அந்த நிகரில்லாக் காட்சியுடன் "பசித்த காகம்"என அன்னதான முக்கியத்துவத்தை எவ்வளவு எளிமையாக விவரித்து விட்டார்.

கொள்ளை போன மணல்
ஊருக்குள் தேடி வரும்
காட்டாற்று வெள்ளம்

மணல் கொள்ளை மாபியாக்களையும் தனது மூன்று வரிக்கூர்ப்புக்கவிகள் மூலம் கடுமையாக சாடியிருப்பது நமது ஒட்டு மொத்த சமூகத்திற்குமான குரல் என்றால் அது மிகையாகாது.

விவசாயத்தையும் அவர் விட்டு வைக்க வில்லை.

புதைத்த குப்பை
கைக்கு வந்து சேரும்
நஞ்சற்ற மரக்கறிகள்

யப்பா....

இயற்கை விவசாய ஆலோசனையை ஆணி அடித்தாற் போல் புகுத்தி விட்ட விந்தையை என்ன வென்பது.

மலையக மக்களின் வாழ்வியல் எளிமையும் இங்கே....

தாழ்வார இருக்கை
சட்டெனத் தேநீரில் விழும்
மழைத்துளி

இது என்வொரு நிதர்சனம். தாழ்வார இருக்கை என்றவுடன் ரிலாக்ஸாக பேசிக்கொண்டே என நினைத்து அடுத்த வரியை நோக்கினேன்.

ஆச்சரியம்....

சட்டென தேநீரில் விழும்
மழைத்துளி.

என மலையக மக்களின் துயரம் நிறைந்த எளிமை வாழ்வு சில வினாடிகளுக்குள் நம் கண் முன்னே.

வியப்பு,அற்புதம்

இளம் கைம் பெண்
கை கொடுக்க முன் வருகிறது
கற்ற கல்வி

ஒற்றைப் பெண்களாக சமூகத்தில் வாழும் இளம் கைம் பெண்களின் வாழ்வியல் அவலங்களை களைய, கல்வி எனும் மூன்றெழுத்தில் பெரும் சாதனைச்

சிகரங்களை, சிங்கப் பெண்மணிகளை உருவாக்கி விடலாம் என்பதை தனது "கடுகுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிகள்” மூலம் முன்றே வரிகளில் முத்தாய்ப்பு வைத்து விட்டார்

நம் கவிஞர் வ.ஃபீரா.

உண்மையிலேயே இவரின் ஒவ்வொரு ஹைக்கூவையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளவே மனசு துடிக்கிறது. அருமையான இப்புத்தகம் எல்லோர் புத்தக அலுமாரிகளையும் நிச்சயம் பெறுமதியானதாக்கும் என்பதில் எந்தவித சந்தேகமு மில்லை.

இவரின் எழுத்துப்பணி சிறக்க, இவரால் இன்னும் பல இலக்கியங்கள் படைத்து வெளிவர எனதன்பான பிரார்த்தனைகளுடனான வாழ்த்துக்கள்



விளம்பரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாவின் புரட்சி

சிறுகதை

மாலை வேளையில் பட்சிகள் தன் இருப்பிடத்தை நோக்கிச் செல்ல குஞ்சுகளும் தாயின் வருகையை எதிர்பார்க்க சூரியனும் தன் வேலை முடிந்து விட்டது என கைக்காட்டி விட்டு ஒழிந்து கொண்டிருக்கும் நேரத்தில் சாலைகளில் வாகன நெரிசல்களுக்கு மத்தியில் கீதா பையொன்றை தூக்கிக் கொண்டு சாலையோரமாக சென்றுக் கொண்டிருந்தாள்.

எங்கு தான் செல்கிறாள் இவள்? யார் தான் இந்த கீதா? பாடசாலைக் காலங்களில் “படிக்காத மக்கு இவள்” என்ற பட்டத்துடனே ஊரில் வலம் வந்தவள். கீதாவின் பெற்றோர்கள் இவளுக்கு படிப்பு ஏறாத பட்சத்தில் திருமணத்தை முடித்து வைத்தனர்.

நடுத்தர கூட்டுக் குடும்பம். தனது குடும்பத்தை தையல் தொழில் மூலம் பார்த்துக் கொண்டிருக்கும் கணேஷன் தான் இவளின் அன்புக் கணவர்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது திருமணமாகி 3 வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் தனக்கு என்று குழந்தைகள் இல்லை என்ற கவலைகள் ஏதுமின்றி தன் வேலைகளை இருவரும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். வீட்டில் கணவனின் அம்மா, அப்பா, சித்தி, சித்தப்பா, அத்தை, மாமா, அவர்களின் பிள்ளைகள் என எல்லோரும் சந்தோஷமாக வாழ்கின்றனர். ஆண்களின் கவனிப்பில் கணேஷின் குடும்பமானது குடும்பத் தலைவிகளினால் நன்றாகவே பராமரிக்கப்பட்டு வருகின்றது. என்றாலும் கீதாவின் செயல்களால் பெரும்பாலும் குடும்பத்தில் உள்ளவர்கள் கோபம் அடைவார்கள்.

ஒரு நாள் கணேஷின் அத்தையின் மகள் படித்துக் கொண்டிருக்கும் போது தேநீரை எடுத்துக் கொண்டு சென்ற கீதா அவளின் கையில் தேநீர் கோப்பையினை வழங்கும் போது கை தவறி புத்தகத்தில் தேநீர் கொட்டி விட்டது. பிள்ளைகளுக்கு கொஞ்சம் இருந்தால் போதாதா? "எனது கொப்பி எல்லா நாசம் என்ன அத்தை செஞ்சீங்க நாளைக்கு ஸ்கூல்" என்று கத்த, வீட்டில் உள்ள மற்றவர்கள் வர கீதாவினால் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் தலைக் குனிந்தவாறு இருந்தாள். நனைந்த கொப்பிகளை வெயிலில் காய வைத்து கொடுத்தாள். தவறுதலாக நடந்த செயலுக்கும் "படிக்காத மக்குக்கு எங்க தெரியப் போகுது படிப்பின் அருமை" என்ற கேள்வி யெல்லாம் கீதாவின் செவியைத் துளைத்த வண்ணம் உள்ளது. படிப்பு இவளுக்கு ஏறாதது இவளின் குத்தமா? இல்லாவிடின் இறைவனின் விதியோ? கீதாவிடம் வேலைகளை வாங்கிக் கொண்டு அவளையே குறைகூறும் உறவுகளாகவே கணேஷின் குடும்ப அங்கத்தவர்கள் இருந்தனர். தான் படிக்காததனால் படித்துக் கொடுக்கவும் முடியாமல் பல சமயங்களில் ஏளனத்திற்கு உட்பட்டாள்.

அன்றைய இரவு கணேஷ் கடையிலிருந்து வந்து பெரிய தையல் ஓர்டர் ஒன்று கிடைத்துள்ளது. அதனை செய்து முடிக்க பத்தாயிரம் தந்து விட்டுச் சென்றார்கள் என்று மிகவும் சந்தோஷமாக குடும்பத்தினரிடம் பரிமாறி விட்டு பணத்தை அம்மாவிடம் நீட்டினான். கணேஷின் அம்மா "என்ன மகன் இது புது பழக்கம், பணத்தை பொண்டாட்டி கிட்ட குடு" என்று கூற, கணேஷ் "அவளிடம் கொடுத்தால் எங்கையாவது வைத்து விட்டு என் தலையை உருட்டுவாள். நீங்களே வைச்சுக்கோங்க" என்றான். கீதாவின் கண்களில் கண்ணீர் நிரம்பியது. கணவரின் அன்பு வார்த்தைகளுக்கு ஏங்கிய உள்ளத்திற்கு கிடைத்ததோ மனதை புண்படுத்தும் வார்த்தைகளே.

மறுநாள் காலையில் கீதாவுக்கு ஒளி வீசும் நாளாக அமையும் என்று அவளுக்கே தெரியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பேப்பர்... பேப்பர்..." என்று காலையில் பேப்பர் காரன் பேப்பரை போட வழமைப்போல் கீதா அதனை எடுத்து வைத்தாள். இருந்தாலும் அவளின் விழிகள் பேப்பரை நோட்டமிட ஒரு போட்டியொன்றின் தகவல் அவளுக்குத் தென்பட்டது. என்ன போட்டியாக இருக்கும்? வேறென்ன? சிறந்த ஆடை வடிவமைப்பாளர் போட்டி. கீதா மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தாள். கீதாவுக்கு ஆடை வடிவமைக்கத் தெரியுமா? என்ற கேள்வி சுற்றியுள்ள எல்லோருக்கும் தோன்றும் நாளில் அதற்கு விடையாக இருக்கும் நாள் எப்போது உருவாகுமோ? என்ற எதிர்பார்ப்புடன் நாட்கள் நகர, கீதா போட்டிக்கான அனைத்து வேலைகளையும் தயார்ப்படுத்த ஆரம்பித்தாள். போட்டிக்கான இறுதி நாளில் தனக்கான பதிவினை மேற்கொண்டு விட்டு சாலையோரத்தில் பையினைத் தூக்கிக் கொண்டு சென்று கொண்டிருந்தாள். அவள் மனதில் ஒரு புதுவித உணர்வுடன் தன் எதிர்பார்ப்பை நோக்கி நடந்தாள்.

போட்டி நடைபெறும் நாளும் வந்து விட்டது. போட்டியானது தொலைக்காட்சியில் நேரலை ஒளிப்பரப்பாகிக் கொண்டிருக்கிறது. கீதாவினை பார்த்த குடும்பத்தினர் செய்வதறியாது திகைத்து நின்றனர். போட்டியின் நிபந்தனைக் கூறப்பட்டு போட்டி ஆரம்பமானது. வினவப்பட்ட வடிவமைப்பினை பார்வையாளர்களின் முன்னிலையில் இரண்டு மணித்தியாலயத்திற்குள் வரைந்து சமர்ப்பிக்க வேண்டும். இரண்டு கட்டங்களாக போட்டி நடைபெறும் என கூறப்பட்டுள்ளது. போட்டியாளர்கள் ஒவ்வொருவரும் தனது திறமைகளை வெளிக்காட்டுவதற்கான முயற்சியினை ஆரம்பித்து விட்டார்கள். நேரம் மிக விரைவாக ஓடிக் கொண்டிருந்தது. முதல் கட்ட இரண்டு மணித்தியாலம் முடிவடைய பங்குபற்றிய இருபது போட்டியாளர்களில் எட்டு போட்டியாளர்களினை இரண்டாம் கட்டத்திற்கு தெரிவு செய்தனர். அதில் கீதாவும் ஒருவர். அழகான வடிவமைப்பினை வழங்கி தனக்கான ஓர் இடத்தை பிடித்துக் கொண்டாள். வீட்டிலிருந்து யாரினதும் துணையின்றி கீதா தன்னை நிரூபிக்க இப்போட்டியில் கலந்து கொண்டதே ஒரு பெரிய சாதனையாகத்தான் நினைக்கிறாள்.

இறுதி இரண்டு மணித்தியாலங்களில் எட்டு போட்டியாளர்களும் முன்னேற போட்டியும் ஆரம்பிக்க நேரமோ கடகட வென நகர்ந்தது. இறுதி விநாடிகள் போட்டி முடிவடைய இருக்கிறது. விதிமுறைக்கேற்ப வித்தியாசமான முறையில் தாய்ப்பாலூட்டும் தாய்மார்கள் செல்லும் இடங்களில் தனக்கு வசதியாக அணியக் கூடிய ஆடையினை வடிவமைத்து முதலிடத்தை கீதா தட்டிச் சென்றாள். அவளின் வெற்றிவாகை வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை என அனைத்திலும் வெளிவர தனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவண்ணத்தினால் தான் மக்கு அல்ல என்று தனது குடும்பத்தாரிடம் நிரூபித்து பற்பல கம்பனிகளிலும் ஆடைகளை வடிவமைத்துக் கொடுக்கின்ற வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொண்டாள். சந்தோஷத்தில் வானில் ஒரு சிட்டாகப் பறந்தாள் நம் கீதா.

கல்வியறிவு மாத்திரம் அறிவல்ல. அனுபவமும் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் தன்னகத்தே இருந்தால் எந்தச் சவாலையும் வெற்றிக் கொள்ளலாம் என்பதை கீதா நிரூபித்தாள். குடும்பமே கீதாவின் திறமையினை வியந்து பாராட்டி கொண்டாடினார்கள்.




## பொன்மொழி

ஒவ்வொரு பெண்ணின்
வெற்றியும் இன்னொருவருக்கு
ஊக்கமளிப்பதாக இருக்க
வேண்டும். நாம்
ஒருவரையொருவர்
உற்சாகப்படுத்தும் போது நாம்
பலமாக இருக்கிறோம்
-செரீனா வில்லியம்ஸ்-

## தாய் எனும் ஒரு விருட்சம்

படைப்பாளனின் - அழகிய
படைப்புக்களிலே
தாய் எனும்
தன்னலமற்ற
உறவின்
உருக்குலையா
பாசத்தினுள்
பிணைக்கப்படாதோருண்டோ..!

ஈரைந்து மாதங்கள்
எம்மைக் கருவில் சுமந்து
இன்னல்கள் பல கடந்து
உதிரத்தை
உணவாய் ஊட்டி
தன்னுலகை மறந்து
எம் உலகை
காட்டிய அன்னை....!

உணர்த்தப்பட்டும்
உணராமல் இருக்கும்
உறவுகளுக்கிடையில்
உணர்த்தப்படாமலே
உணர்ந்து கொள்ளும்
உன்னதமான - ஓர்
உள்ளத்தின்
உயிர்

அடி மரத்தின்
ஆணி வேராய்
இலைகள்
சுமைகளை
சுகமாகத்
தாங்கும்
தியாக நிழலொளி...


தூக்கத்தைத்
தூரமாக்கி
வலிகளையும் - நல்
வழிகளாய் காட்டி
தன்னம்பிக்கையை ஊட்டிய
தாயும் - இவ்
வையகத்தில் - தனி
விருட்சமே...!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையல் குறிப்புகள்

## மரவள்ளிக் கிழங்கு பகோடா



தேவையான பொருட்கள்.
500g மரவள்ளிக்கிழங்கு
½ ஸ்பூன் பெரும் சீரகம்
4 வரமிளகாய்
1 பெரிய வெங்காயம்
தேவையான அளவு உப்பு
2 கொத்து கறிவேப்பிலை

தயாரிக்கும் முறை: முதலில் மரவள்ளிக்கிழங்கை தோல் சீவி துருவி எடுக்கவும் அதனுடன் பெரும் சீரகம் வரமிளகாய் இவற்றை மிக்ஸியில் அரைக்கவும். பின்னர் ஒரு பாத்திரத்தில் எடுத்து இதனுடன் உப்பு, பொடியாக நறுக்கிய வெங்காயம், பொடியாக நறுக்கிய கறிவேப்பிலை இவற்றை நன்றாக பிசைந்து எடுக்கவும். பின்னர் அடுப்பில் சட்டி வைத்து மிதமான சூட்டில் தேங்காய் எண்ணெய் ஊற்றி சூடாக்கவும் எண்ணெய் சூடானபின் பிசைந்தெடுத்த மரவள்ளிக் கலவையை குடடிக் குட்டியாக எண்ணெய்யில் பொன்னிறப்பருவத்தில் பொரித்து எடுக்கவும்.
பின்னர் சூடாக தக்காளி சொஸ்சுடன் பறிமாறலாம்.



நௌஷா ஜமால்டீன்


## வெங்காய ரவை வடை



தேவையான பொருட்கள்.
2 கப் வறுத்த ரவை
2 ஸ்பூன் அரிசி மாவு
தேவையான அளவு உப்பு
4 பெரிய வெங்காயம்
3 பச்சை மிளகாய்
1 சிறிய துன்டு இஞ்சி
3 பல்லு பூண்டு
கொஞ்சம் கொஞ்சமாக கொத்தமல்லி தழை
¼ ஸ்பூன் சீரகம்
¼ ஸ்பூன் கரம்மசால

செய்யும் முறை: வறுத்து எடுத்த ரவை, அரிசி மாவு, உப்பு, பெரிய வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு இரண்டையும் துருவி சேர்க்கவும் கொஞ்சமாக கொத்தமல்லி தழை சீரகம் கரம்மசால இவைகளை கொஞ்சம், கொஞ்சமாக நீர் சேர்த்து நன்றாக பிசைந்தெடுக்கவும். பின்னர் தன்நீரில் கையை தொட்டு பிசைந்தமாவை எழுமிச்சை உருண்டை அளவு பிடித்து கையில் வைத்து தட்டி எடுக்கவும் பின் தட்டிய மாவில் நடுவில் சின்னதாக1கொள் போட்டு எடுக்கவும். பின்னர் அடுப்பில் சட்டியை வைத்து எண்ணெய் நன்றாக காயவைத்து தட்டி வைத்த மாவை காயவைத்த எண்ணெய் யில் போட்டு பொன்னிறப்பருவத்தில் பொரித்து எடுக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருதய அடைப்பு/ மாரடைப்பு
## Myocardial Ischemia/ Infarction

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம் என்பார்கள். அதேபோல மனித உடலின் உள்ளங்கங்களுக்குள் மிகவும் பிரதானமானது இதயமாகும்.

இதயம் ஒரு கணம்கூட நிற்காமல் தொடர்ந்து சுருங்கி விரிந்தபடி இருக்கிறது. இதனால், இதயத்தில் இருந்து இரத்தம் உடலின் மற்றைய பகுதிகளுக்குப் பாய்ச்சப்படுகிறது. இரத்தம்தான் உடலின் மற்ற பகுதிகளுக்கு ஒட்சிசனையும் போசணைக்கூறுகளையும் எடுத்துச் செல்கிறது. இதன் மூலம் உடலிழையங்கள் சக்தியைப் பெற்று அப்பகுதிகள் நல்ல இயக்கத்துடன் இருக்கும்.

இதயம், தசைப்பையைப் போன்றதுதான். மழமழப்பான தசையால் ஆனது. இதயமும் தனக்குள் வரும் குருதி மூலமாகவே ஒட்சிசன் மற்றும் போசணைமூலக்கூறுகளை முடியுரு நாடி மூலம் பெறுகிறது. பொதுவாக, இதயத்தின் இரத்தக் குழாய்கள் பல்வேறு கடினமான சூழ்நிலைகளிலும் திறம்படச் செயல்படும் இயல்பைக் கொண்டன. சில காரணங்களால் அவை சரிவரச் செயல்பட முடியாதபோது, உடல் கோளாறுகள் ஏற்படுகின்றன. இதயத்தசை இறப்பு என்பது இதயக் கோளாறு, மாரடைப்பு போன்ற பொதுவான பெயர்களால் குறிப்பிடப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சு வலி (Angina)

நெஞ்சு வலி பொதுவாக நெஞ்சில் ஆரம்பித்து, தாடை, கை, கழுத்து என்று பரவிச்செல்லும் தன்மை உடையது. சில சமயம் முதுகுக்கும் பரவும். தொடர்ச்சியான வலி இருக்கும். அதிக தூரம் நடக்கும்போதோ, படியேறும்போதோ, உடலளவில் கடுமையான செயல்களில் ஈடுபடும்போதோ, மன அழுத்தத்தின்போதோ, கூடுதலளவில் நெஞ்சில் வலி ஏற்படும். ஓய்வு எடுத்தால், வலி குறைந்து நின்றுவிடும். சிலருக்கு வேலை செய்யாமல் ஓய்வாக இருக்கும்போதேகூட நெஞ்சு வலி ஏற்படலாம். இந்தக் குறிப்பிட்ட நிலை ஆபத்தானது. ஏற்கெனவே ஒரு முறை நெஞ்சு வலி வந்திருந்து, இப்போது குறைந்த வேலைகளைத் தொடர்ந்து செய்யும்போதுகூட நெஞ்சு வலி வந்ததென்றால், நிச்சயம் உடலைக் கவனிக்க வேண்டும். ஒருமுறை நெஞ்சு வலி வந்தால்கூட மருத்துவரை அணுகி பரிசோதித்துக் கொள்வது அவசியம். நெஞ்சு வலி இருப்பவர்க்கு மாரடைப்பு வரும் வாய்ப்பு அதிகம். சரியாகக் கையாண்டால் வலி வராமல் தடுத்து ஆரோக்கியமாக வாழமுடியும். வலியினால் ஓய்வெடுக்கும்போது, அந்த அவகாசத்தில் இதயம் தன்னைச் சீர்செய்து கொள்கிறது. அதனால் நெஞ்சு வலி குறைவடைகிறது. இவ்வாறான நெஞ்சு வலியை இதயம் நமக்குத் தரும் எச்சரிக்கை மணியாகக்கொள்ளலாம்.




## காரணம்

இதயத்திற்கு குருதி வழங்கும் முடியுரு நாடிகளின் உள்விட்டத்தினளவு குறுகிவிடுவதே இதற்கான காரணமாகும். இதனால் குறைந்த அளவு இரத்தம்தான் இதயத்துக்குச் செல்கிறது. இதன் காரணமாக, இதயத்துக்கு குறைந்தளவு ஒட்சிசன், போசணைக்கூறுகளே கிடைக்கின்றன.

கடினமான வேலைகளில் ஈடுபடும்போது, அதிகளவு சக்தி இதயத்தசைகளுக்குத் தேவைப்படுகிறது. குறுகிப்போன நாடிகளால் அதிகளவு குருதியைப் பாய்ச்ச ஈடுகொடுக்கமுடிவதில்லை. இதனால், இதயத்துக்குப் போதுமான ஒட்சிசன் கிடைக்காமல் வலி ஏற்படுகிறது. இந்நிலை தொடருமானால், இரத்தம் குறைவாக வழங்கப்படும் இதயத்தின் பகுதியின் திசுக்கள் இறக்க நேரிடும். (மயோகாடியல் இன்ஃபாக்சன் - (Myocardial Infarction) அதிக இரத்த அழுத்தம், இரத்தச்சோகை, குளிர்ந்த சூழல், மதுப்பழக்கம், புகைபிடித்தல், உடற்பருமன், ரத்தத்தில் அதிகக் கொழுப்பு ஆகியவை நெஞ்சு வலி ஏற்படுத்தும் வாய்ப்பை அதிகரிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தத்தில் உள்ள கொழுப்புப்படலங்கள் மற்றும் பல்வேறுபட்ட படிவுகள் நாடிகளில் படிதல் இன்னும் நாடிகளில் உள் மேற்பரப்பில் ஏற்படும் தடிப்பு, காயங்கள் போன்ற காரணங்களால் முடியுரு நாடிகளின் உள்விட்டம் குறையத் தொடங்குகிறது. மேற்கூறிய கொழுப்புப் படலம் அதிகமாகும்போதோ, வேறு பல காரணங்களாலோ, படலங்களும் படிவுகளும் நாடியின் சுவரில் இருந்து பிரிந்து நாடியை அடைத்து, இரத்த ஓட்டத்தை முழுமையாகத் தடைப்படுத்துகிறது. இதனால், இதயத்தசைகளின் இயக்கத்துக்கான முடியுரு நாடிகளின் மூலமான இரத்தம் இதயத்தின் பகுதிகளுக்குக் கிடைப்பது குறைந்து அல்லது முழுமையாக நின்றுவிடுகிறது. இதனால் இதயத்தின் திசுக்கள் இரத்தம் இன்றிப் பாதிக்கப்பட்டு இறக்க நேரிடுகிறது. இதனால் இதயம் செயலிழந்து போகிறது. அதைத்தான் மாரடைப்பு என்கிறோம்.



இதயத் தசை இறப்பால் ஏற்படும் மாரடைப்பு அறிகுறிகள் (மயோக்காடியல் இன்பாக்ஷன் - Myocardial Infraction)

நெஞ்சு வலிதான் பொதுவான அறிகுறி. இந்த வலி அதிக வீரியத்துடனும், அழுத்தத்துடனும் இடது நெஞ்சுப் பகுதியில் இருந்து தாடை அல்லது இடது கைக்குப் பரவும். மூச்சுவிடச் சிரமமாக இருக்கும். அதிகமாகவும் வேர்க்கும். வாந்தி மற்றும் மயக்கமும் ஏற்படலாம். சிலர் இந்த அறிகுறிகளால் பயம் மற்றும் பதட்டமாக உணர்வர்.

முன்பு கூறிய "அன்ஜைனா" வலி போல் இன்றி, இந்த வலி ஓய்வு எடுத்தாலும் குறையாது. சில சமயங்களில் இந்த வலி நெஞ்சுக்குழியில் இருக்கும். மிகவும் வயதானவர்களுக்கும், பெண்களுக்கும், சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கும், நெஞ்சு வலியின் வீரியம் குறைவாகவும் இருக்கும், காரணமே இல்லாமல் சோர்வாகவும், களைப்பாகவும் இவர்கள் காணப்படுவார்கள். (Silant MI). மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால் காலதாமதம் இன்றி மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்தானது.

மாரடைப்பு ஏற்படுகின்ற வாய்ப்பை அதிகரிக்கும் காரணிகள்:

- வயது 65-க்கு மேற்பட்டோருக்கு இருபாலருக்குமே மாரடைப்பு வரும் வாய்ப்பு அதிகம்.
- ஆண்களுக்கு இளம் வயதிலும், பெண்களுக்கு மாதவிடாய் நின்ற பிறகும் வரும் வாய்ப்பு அதிகம்.
- மரபு வழியாக குடும்பத்தினர் யாருக்கேனும் மாரடைப்பு ஏற்பட்டு இருந்தால், மற்றவருக்கும் வரும் வாய்ப்பு அதிகம்.
- இரத்தத்தில் கொழுப்பின் அளவு:

கொலஸ்ட்ரால் எனப்படும் கொழுப்பைப்பற்றி நாம் அதிகமாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விப்பட்டு இருக்கிறோம். இதில் ஐந்து வகை உண்டு. உடலில் உள்ள ஒவ்வொரு கலத்துக்கும் (cell) இது மிகவும் அவசியத் தேவை. இதன் அளவு இரத்தத்தில் அதிகரிக்கும்போதுதான் பிரச்சனை ஆரம்பிக்கிறது. ட்றைகிளிசிரைட் (triglyceride) மற்றும் எல் டி எல் (LDL) வகை கொழுப்பு அதிகமானால் மாரடைப்பு ஏற்படும்

கேக், பிஸ்கட் வகைகள், வறுத்த பொருட்கள், இறால், கணவாய், ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், பாலாடை, வெண்ணெய் ஆகியவை அதிகமாக உட்கொள்ளும் போது கொழுப்பின் அளவு அதிகமாகிறது. மரபு வழியாகவும், உணவில் கவனம் செலுத்தாமலும் போனால், ரத்தத்தில் கொழுப்பு அதிகரிக்கும். இதைத் தவிர, தைராய்ட், சிறுநீரகக் கோளாறுகள், மதுப் பழக்கம் ஆகியவை ரத்தத்தில் கொழுப்பின் அளவை அதிகரிக்கும்.

இப்போதுள்ள வாழ்க்கை முறையில் இளவயதினரும் ரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவைப் பரிசோதித்துக் கொள்ளுமாறு மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுகிறது.

- உடல் நிறை

சீரான உடல் எடைக்கு ஆரோக்கியமான சம-விகித உணவு, தொடர் உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைமுறை அவசியம். இதயம் சீராகச் செயல்பட உடல் எடை சீராக இருத்தல் அவசியம்.

- இரத்த அழுத்தம்:

அதிக இரத்த அழுத்தம் இருந்தால் சரியான சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். இதனுடன் உணவில் உப்பின் அளவைக் குறைத்தல், சமவிகித உணவு, உடற்பயிற்சி, மது மற்றும் புகைப் பழக்கத்தை நிறுத்துதல், இரத்த அழுத்தத்தைச் சீர்செய்யும். இரத்த அழுத்தத்துடன், புகை பிடிக்கும் பழக்கமும், அதிக கொலஸ்டிரால் அளவும் இருந்தால் மாரடைப்பின் அபாயம் அதிகம்.

- புகை பிடித்தல்:

நெஞ்சு வலி அதிகரிப்பதுடன் மாரடைப்பு ஏற்படுத்தும் வாய்ப்பையும் அதிகரிக்கிறது. புகை பிடிக்காதவர்களுடன் ஒப்பிடும்போது, புகை பிடிப்பவர்களுக்கு மாரடைப்பு வரும் வாய்ப்பு மூன்று மடங்கு அதிகம்.

- நீரிழிவு நோய்:

இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு சீராக இல்லை என்றால் இதயத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும். அதிக சீனிச்சத்து நாடி, நாளங்களின் சுவற்றைப் பாதித்து அதிகக் கொழுப்பைப் படரச் செய்யும். நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும் மற்றவர்களுடன் ஒப்பிடும்போது, மாரடைப்பு வரும் வாய்ப்பு மூன்று மடங்கு அதிகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உடற்பயிற்சியின்மை:

தினமும் 30 நிமிடங்கள் வீதம் வாரத்துக்கு ஐந்து தடவையாவது உடற்பயிற்சி செய்ய வேண்டும். இது, இரத்தத்தின் கொழுப்பு அளவைக் குறைப்பதுடன் உடல் எடையைச் சீராக்கி, இரத்தத்தில் குளுக்கோஸின் அளவைக் குறைத்து, நீரிழிவு நோயையும் தடுக்கும். இவை தவிர, மன அழுத்தம், மதுப் பழக்கம் போன்றவையும் மாரடைப்பு ஏற்படக் காரணமாக அமையலாம்.

எனவே ஆரோக்கியமான உணவு உடற்பயிற்சி மற்றும் மது மற்றும் புகைப்பிடித்தல் பழக்கங்களில் இருந்து தவிர்ந்து கொள்ளுதல் என்பவற்றை நாம் நாளாந்தம் கடைபிடித்து இருதய அடைப்பிலிருந்து நம்மைக் காத்துக் கொள்வோம்.

நன்றி



Dr. ஜலீலா முஸம்மில்

கவிதை

# பெண்குழந்தைகளே கவனம்

பாதையின் வழியே
பயணிக்கும்
பெண் குழந்தைகளே கவனம்

போதையால் தடுமாறி புத்தி பேதலிக்கும்
இளைஞர்களால் நீங்கள்
சீரழிந்து போகலாம்.
கவனம் மக்காள்.

பச்சோந்திகளிடம்
உள்ளத்தை அடகு வைத்து
உங்களை நீங்கள்
இழந்து விடாதீர்கள்.

துணையில்லாமல்
வெகுதூரம் சென்று
நிலைகுலைய வேண்டாம்

குள்ளநரிகளிடம் அகப்பட்டு
நிம்மதியிழந்து
நிர்மூலமாகாதபடி
வாழ்வை செப்பனிடுங்கள்.

உங்களால் உடையவும்
உங்களால் மகிழவுமான
அன்புப்பெற்றோரின்
அறிவுரை கேளுங்கள்.
புத்தி பேதலித்து
வாழ்வைத் தொலைக்காதீர்.
போதைக்கு அடிமைப்பட்ட ஆண்கள்
பேதைகள் உங்களை வசியப்படுத்தவும்
வாழ்வைச் சூறையாடவும்
விஸ்வரூபமெடுப்பர்.
கவனம் சிறுமிகளே.

உங்களை நேரில் மட்டுமல்ல
வலைத்தளங்ளிலும்
பின் தொடர்வர்.
பாதுகாப்பாயிருங்கள்.

நாகரீக வாழ்வில்
அநாகரீகமான செயல்கள்
இன்றைய காலகட்டத்தில்
மலிந்துள்ளது.

பெண் குழந்தைகளே கவனம் நீங்கள




பானு ஜிப்ரி
சாய்ந்தமருது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்தில் காளான் உற்பத்தி மூலம் மனைப் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு

கட்டுரை



இன்றைய பொருளாதார நெருக்கடி மற்றும் போசணை குறைபாட்டினை நிவர்த்தி செய்ய கூடிய குறைந்த செலவில் அதிக வருமானத்தை தரக் கூடியதும் மருத்துவ குணமிக்கதாகவும் இக்காளான் செய்கை காணப்படுகின்றது.

இலங்கையில் பிரதானமாக இரண்டு வகையான காளான்கள் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப்படுகிறது. அதாவது சிப்பி/ ஒயிஸ்டர் காளான் (வெண்நிறமானது), அந்தோனி சிப்பிக் காளான்/ வைக்கோல் காளான் (கபில நிறமானது). இது பசிடியோமயிசிடிஸ் வகுப்பை சேர்ந்த பூஞ்சணம்/ பங்கசுவாகும்.

காளான் போசணை சத்து நிறைந்த உணவாக உள்ளதனால் இதிலிருந்து பல வகையான உணவுகள் தயாரிக்கப்பட்டு நுகரப்படுகின்றது.

இதற்காக 11 அடி நீளமான 10 அடி அகலமான 8 அடி உயரமுடைய கொட்டில்கள் அமைக்கப்பட்டு அதனுள் இறாக்கைகள் அமைத்து காளான் செய்கை பண்ணப்படுகிறது.

இவ்வாறு அமைக்கப்பட்ட கொட்டிலில் அடைகாக்கும் அறை, அறுவடை அறை என இரண்டு அறைகள் காணப்படும்.அடைகாக்கும் அறையில் 1500 பூஞ்சணம் வளர்வதற்காக வித்திடப்பட்ட ஊடக பைகளும், அறுவடை அறையில் பூஞ்சண இழை படர்ந்து அறுவடைக்கு தயாரான 1500 ஊடக பைகளையும் வைத்து பேணப்படுகின்றன. கொட்டிலினுள் செல்லும் போது தொற்றுகள் ஏற்படுவதை தவிர்க்க கை, கால்களை கழுவும் விதமாக கொட்டிலின் வெளியே நீர்த்தொட்டி/ Food bath ஒன்று அமைக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காளான் வளர்பிற்கு தேவையான மூலப்பொருட்கள் (240 பைகளுக்கானது)**

மரத்தூள் - 100Kg
அரிசித் தவிடு - 10Kg
நீர்ச்சுண்ணாம்பு/CaCO3 - 02Kg
மக்னீசியம் சல்பேற்று - 200g
சோயா.'. பயறு மா - 01Kg

பொதியாக்கலுக்கான பொருட்கள்:

- PVC குழாய் - 05
- இறப்பர் பட்டி - 05 பக்கட்
- பொலிபுரப்பலின் பை (7" அகல 14" உயரம்) - 02½ Kg
- பஞ்சு (50g பக்கட்) - 05 பக்கட்
- காளான் வித்தி - 08 பக்கட்
- தொற்று நீக்கத்திற்காக ஊடகத்தை அவிப்பதற்கு வருடத்திற்கு 02 பீப்பா தேவையாகும்.

**காளான் உற்பத்தி முறையானது பல படிமுறைகளை கொண்டது.**

வளர்ப்பு ஊடகம் தயாரிப்பு

மரத்துண்டுகள்/ மரமீதிகள் அற்ற உலர்ந்த மரத்தூளை எடுக்கவும். சிறிதாக வெட்டப்பட்ட மரத்தூளே மிகவும் பொருத்தமானது. எனினும் சிறிதாக வெட்டப்பட்ட மரத்தூளின் 70% உம், சற்று பெரிதாக வெட்டப்பட்ட மரத்தூளின் 30% உம் கொண்ட கலவையினை பயன்படுத்தலாம்.

வெள்ளை/ சிவப்பு அரிசித் தவிடு பயன்படுத்தலாம். எனினும் பயன்படுத்தப்படும் தவிட்டில் அரிசி மீதிகள் காணப்படக்கூடாது. முதலில் அரிசித் தவிடு, சுண்ணாம்பு, சோயா மாவினை கலந்து பெறப்பட்ட கலவையினை மரத்தூளுக்கு இட்டு நன்றாக கலக்கவும்.பின் மக்னீசியம் சல்பேற்றினை நீரில் கரைத்து பெறப்பட்ட கரைசலினை பூவாளி ஒன்றினுள் இட்டு மேலதிக நீர் சேர்த்து மரத்தூள் கலவைக்கு இட்டு நன்கு கலக்கவும். தேவையான அளவு நீர் சேர்க்கப்பட்ட கையால் இறுக்கி பிடித்து விட்டு தளர்த்தும் போது 4-5 பகுதிகளாக உடைந்து செல்லும்.

வளர்ப்பு ஊடகம் தயாரித்தல்

பொலிபுறப்பலீன் பையினுள் கையை விட்டு மறுபக்கத்திற்கு பையினை திருப்பவும்.தயாரித்த வளர்ப்பூடகத்தின் 01முப இனை அதனுள் நிரப்பவும்.

PVC குழாயினை பையின் நுனிப்பகுதி யில் இட்டு ஏற்படும் துவாரத்தை பஞ்சு மூலம் நிரப்பவும். பின்னர் பஞ்சினால் மூடப்பட்ட துவாரத்தை கடதாசி துண்டினால் மூடி இறுக்கமாக இறப்பர் பட்டியினால் கட்டிக் கொள்ளவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்பு ஊடகத்தை தொற்று நீக்குதல்:

தேவையான பொருட்கள்

- ✓ சிறிய துளை கொண்ட மூடி பொருத்தப்பட்ட கிறிஸ்: டீசல்
- ✓ பரல் மரத்தால்: இரும்பால் செய்யப்பட்ட 5–5½" உயரமான பரலினுள் வைக்கக் கூடிய தாங்கி (Stand)

இடைவிட்டு அதாவது இடியாப்ப தட்டினை இடியாப்ப சட்டியினுள் வைப்பது போன்று ஊடக பைகளையும் அடுக்கி வைத்து பரலினை இறுக மூடவும். மேற்படி முறையில் பரலினுள் அடுக்கப்பட்ட வளர்ப்பு ஊடகப் பைகள் சிறிய துளையிலிருந்து நீராவி வெளியேற தொடங்கியது முதல் 2-2½ மணித்தியாலங்கள் வெப்பப்படுத்தி தொற்று நீக்கம் செய்யப்படும்.



விதை: வித்தி இடல்

தேவையான பொருட்கள்:

- ஆரோக்கியமான வித்திப்பை
- மெழுகுதிரி
- தொற்று நீக்கி
- மேசை

காளான் விதைகளை: வித்திகளை பையினுள் இடுவதற்கு அறை ஒன்றினுள் உள்ள மேசை ஒன்றைப் பயன்படுத்தவும். ஆரோக்கியமான வித்திப்பை உள்ள நெல்மணிகளை தனித்தனியே வேறாக்கிக் கொள்ளவும். தொற்றுநீக்கி ஒன்றைப் பயன்படுத்தி அறையில் உள்ள மேசையை தொற்று நீக்கம் செய்யவும்.

1-1½ சதுர அடியில் அமையும் வண்ணம் 04 மெழுகுதிரிகளை வைத்து பற்ற வைக்கவும்.இளம் சூடான வெப்பத்தில் வளர்ப்பு பைகளைத் திறந்து அதனுள் 25-30 விதைகளை இடவும். பின் பஞ்சு, 3" X 3" நீள அகலமான காகிதத்துண்டு, PVC குழாய் துண்டினை பயன்படுத்தி வளர்ப்பு பையை மூடவும். ஒரு வித்திப்பை 50-55 வளர்ப்பு பைகளுக்கு போதுமானது.

பங்கசினை வளர்ப்பு பையினுள் வளர்த்தல்: பரவவிடல்.

இதற்காக பயன்படுத்தப்படும் அறை 75% இருட்டாகவும், 26-28°C வெப்ப நிலையிலும் காணப்படல் வேண்டும். பங்கசு வளர்வதற்கு அமெரிக்கன் சிப்பி காளான் 25-30 நாட்களும், அபலோனி சிப்பக்காளான் 40-45 நாட்களும் எடுக்கும். வளர்ச்சி காலத்தில் வளர்ப்பு பைகளை அடிக்கடி அவதானித்து பாதிக்கப்பட்ட/ பழுதடைந்த பைகளை உடனடியாக அழித்து விடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளான் உருவாவதற்கான உற்பத்தி கூடாரத்தை அமைத்தல்

காளான் உருவாவதற்கு தேவையான காரணிகள்

- வெப்பநிலை
- சாரீரப்பதன்
- ஒளி/ வெளிச்சம்
- சிறந்த காற்றோட்டம்

அவிக்கப்பட்டு/ தொற்று நீக்கப்பட்ட பைகளை ஆறவிட்டு வித்தி இடப்பட்ட வளர்ப்பு ஊடகத்தில் பூஞ்சண இழைகள் நன்றாக வளர்ச்சி அடைந்த பின் இப்பைகளின் முகப்பு வெட்டி அகற்றப்பட்டதும் அறுவடை அறையின் இறாக்கைகளில் கிடையாக அடுக்கி வைக்கப்பட்டு குளிர்ச்சியான சூழலில் பேணப்படும்.

அறுவடை

முகப்பு வெட்டியதிலிருந்து ஒரு வாரத்தில்/ 7-10 நாட்களில் சிறிய மொட்டுகள் வர ஆரம்பிக்கும். மொட்டுகள் வர ஆரம்பித்து 03 நாட்களில் அறுவடையைத் தொடங்கலாம். அறுவடை செய்தபின் வளர்ப்பு பையின் வாயிலை சுத்தம் செய்து நீர் தெளித்து விடவும். மீண்டும் 07-10 நாட்கள் இடைவெளியில் தொடர்ச்சியாக அறுவடையை பெறலாம். இவ்வாறு தொடர்ச்சியாக 03-04½ மாதங்கள் அறுவடை செய்யலாம். சராசரியாக ஒரு பொதியில் இருந்து ஒரு கிலோகிராம் வரை பெறலாம். மேலும் முதல் 02 மாதங்களுக்கு அறுவடை பெறப்படும் அளவு படிப்படியாக அதிகரித்து அதன் பின் படிப்படியாக குறையத் தொடங்கும். இக்காளான் செய்கை குறைந்த மூலதனம், நேரம், தொழில்நுட்ப அறிவு என்பனவற்றைக் கொண்டு சுயதொழில் ஆக பெண்களால் மேற்கொள்ளக் கூடிய ஒரு தொழிலாக உள்ளமையால் மனைப் பொருளாதாரத்தில் ஒன்றரை மாத காலத்திலேயே வருமானம் பெறக்கூடிய ஒரு தொழிலாக உள்ளதுடன் பெண்களின் பங்களிப்புடனான ஒரு விவசாய செய்கையும் ஆகும்.



M.H. முர்ஷி[illegible] ஷிரீன்

**பொன்மொழி**

உங்களைத் தவறான திசையில்
வழிநடத்தியதற்காக உங்கள்
பெற்றோரை குற்றம் சாட்டுவதற்கு
காலாவதி தேதி உள்ளது,
உங்களுக்கு வண்டி ஓட்டப்
போதுமான வயதாகிவிட்டால்,
பொறுப்பு உங்களிடம் தான்
உள்ளது.

ஜே. கே. ரௌலிங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவடைந்த உள்ளம்

சிறுகதை

ஒரு கிராமத்தில் மிகவும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்து செல்வத்தில் வாழ்ந்த சில்மியாவுக்கு ஒரு தம்பி மட்டும்தான். தன் பள்ளிப் படிப்பை முடித்து விட்டு, மேற்படிப்புக்காக வெளிநாடு சென்று, படித்து முடித்து விட்டு வீடு திரும்பியிருந்தாள் சில்மியா,

சில்மியாவின் தந்தை இரத்தினக்கல் வியாபாரத்தில் பேர்போன மனிதர். தாயும் ஆங்கில ஆசிரியையாக திருமணத்துக்கு முன்னர் வேலை பார்த்திருந்த போதிலும், தந்தை விரும்பாத காரணத்தினால் வேலையை விட்டு நின்று விட்டாள்.

சில்மியா படித்திருந்த போதிலும் தந்தை விரும்பாத காரணத்தினால் வேலை பார்க்காமல் வீட்டிலேயே இருந்து விட்டாள். ஆனாலும் இயற்கையாகவே கலையுணர்வும், இலக்கிய ஆர்வமும் மிக்க அவள், தன் எண்ணங்களை கதை, கவிதை, கட்டுரை, பாடல் என எழுதி பத்திரிகைகளுக்கும்,

சஞ்சிகைகளுக்கும் நாள்தோறும் அனுப்பிக் கொண்டிருந்தாள். இதனால் அவள் எழுத்தாற்றலும் வளர்ந்து, பொழுதும் பயனுள்ளதாகக் கழிந்தது.

இந்த நிலையில் அவளது பெற்றோர் சில்மியாவுக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிக்கும் போது அவளது அபிப்பிராயத்தை அவளது பெற்றோர் அறிய விரும்பினார்கள். "எனது கலையார்வத்துக்கு முற்றுப்புள்ளிவைக்க நினைக்காமல், யார் தொடர அனுமதிக்கிறார்களோ அவரே எனது கணவனாக வேண்டும்" என்று தனது விருப்பத்தை சில்மியா அவர்களுக்கு தெரியப்படுத்தினாள். ஒரு விதத்தில் அது கட்டளையும் கூட.

அவளது கட்டளைப்படியே அவளது பெற்றோர் மணமகனைத் தேடினார்கள். அவர்களது தேடலுக்கமைவாக, அதே ஊரில் டொக்டராக வேலை பார்க்கும் நல்ல குடும்பத்தில் பிறந்த சாதீக் தென்பட்டான். சாதீக்கின் தந்தையும் ஒரு கண் டொக்டர். சில்மியாவின் தந்தையும், சாதீக்கின் தந்தையும் நல்ல நண்பர்களும்கூட. அதனால் இருவரும் சந்தித்த போது" மகனுக்கும் மகளுக்கும் திருமணம் செய்து வைப்போம்... இருவரது விருப்பங்களையும் கேட்டு முடிவெடுப்போம்" என்று கூறிவிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரவர் வீடுகளுக்கு சென்று விட்டனர்.

வீட்டுக்கு வந்த சில்மியாவின் தந்தை, தன் மனைவியை அழைத்து மகளின் திருமண விடயத்தைப் பற்றி பேசினார். "இங்க பாருங்க றாகிலா... நம்மட மகள் சில்மியாவுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும்... பருவத்தோடு பயிர்செய்ய வேண்டும் என்ற பழமொழிக்கேற்ப நேரகாலத்தோடு திருமணத்தை செய்வதுதான் நல்லது. என் நண்பனான டொக்டர் நவாஸை உங்களுக்குத் தெரியும் தான... அவரோட மகன் ஸாதீக் ஒரு டொக்டர்... நம்ம ஊர் வைத்தியசாலைலதான் வேலை செய்கிறார்... நம்மட பிள்ளைக்கு பொருத்தமானவர்... நான் நவாஸோட கதைச்சன்... மகனுகிட்ட கேட்டுட்டு சொல்றன் என்று சொன்னார்... நீங்க மகளுக்கிட்டயும் சொல்லி வைங்க..." என்று கூறிவிட்டு, தனது அலுவல்களைப் பார்ப்பதற்காக வெளியில் கிளம்பி சென்று விட்டார்.

இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் மிகவும் கோலாகலமாக இனிதே நடந்தேறியது. நாட்கள், வருடங்களாகி சென்று கொண்டிருந்தன. சில்மியா தனது எழுத்தார்வத்தை நிறுத்தாது தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தாள். அவளது கணவரும் அவளின் ஆக்கங்களைப் பார்த்து மகிழ்ந்து அவளுக்கு உற்சாகமூட்டிக் கொண்டிருந்தார்.

இவ்வாறு சந்தோஷமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த சில்மியா சாதீக் வாழ்க்கையில், பொறாமையால் ஒரு பயங்கர சூறாவளி வீசத் தொடங்கியது.

சாதீக்கின் சகோதரியான சாமிலா சில்மியாவின் எழுத்துத்துறைப் பயணத்தை, மோசமான கண்ணோட்டத்தில் பார்க்க ஆரம்பித்தாள். சில்மியாவின் முன்னேற்றம் சாமிலாவைப் பொறாமைப்பட வைத்தது. அதன் பலனாக அவளது தம்பியான சாதீக்கிடம் ஒவ்வொரு நாளும் இல்லாத பொல்லாத கதைகளையெல்லாம் கூற ஆரம்பித்தாள்.

"இதோ பாரு தம்பி... எழுதுறத விட்டுப் போட்டு சில்மியாவ சமையல், பிள்ளை வளர்ப்பு இவைகளை மட்டும் செய்யச் சொல்லு. ஒழுக்கமான பெண்கள் இதெல்லாம் செய்ய மாட்டாங்க... இந்த எழுதற வேலய உடன நிப்பாட்ட சொல்லு... உன்ட வாழ்க்கைல நீ எப்படி உழைச்சாலும் நீ முன்னேற ஏலாது... இப்படி வீட்டுப் பொம்பிள இப்படி ஆடினா நீ ஒரு நாளும் உருப்பட மாட்டாய்... இந்த எழுத்து வேலைகளை செய்கிற ஆட்கள் நல்லா வர மாட்டாங்க... வீட்டுக்குள்ள முடுமை தான் வரும்." என்றெல்லாம் மோசமான கதைகளைக் கூறி, நல்லா இருந்த சாதீக்கின் மனதை மாற்றிவிட்டாள் ஷாமிலா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம்மாறிய சாதீக், தனது சகோதரி சாமிலாவைக் காட்டிக்கொடுத்து விடாமல் "இங்க பாருங்க சில்மியா... பொம்பளைனா பொம்பள மாதிரி இருக்கணும்... தேவையில்லாத வேலையெல்லாம் பார்க்கக்கூடாது..." என்று வீடே அதிரும்படி, தான் ஒரு டொக்டர் என்பதையும் மறந்து கத்தினான். சில்மியா எதுவும் புரியாமல் அதிர்ந்துபோய் நின்றாள்.

"பொம்பிளைனா சமையல் வேலையை பார்த்து, பிள்ளைகளையும் வளர்த்துகிட்டு ஒழுங்காக வீட்ல கம்முனு இரு... இனிமேல் உனக்கு எழுத்தும் வேணாம் ஒண்ணும் வேணாம்..." என்றவன் அவள் எழுதிவைத்திருந்தது எல்லாவற்றையும் வெளியே வீசியெறிந்துவிட்டு, "இனிமேல் எழுதக் கூடாது" என்று கட்டளை போட்டுவிட்டான். யாரிடமும் எதுவும் கூற முடியாமல் அவள் தனக்குள்ளேயே அழுது பிரார்த்தித்தாள்.

பல வருடங்கள் கழிந்துவிட்டன. சில்மியா எழுதுவதில்லை. கணவனின் சொல்லுக்கு மரியாதை கொடுத்து அடக்கமாகவே இருந்து விட்டாள் என்றோ ஒரு நாள் நல்ல காலம் பிறக்கும் என்கிற நம்பிக்கையோடு...

அன்று வீட்டு வேலைகளை முடித்து விட்டு, அசதியில் அங்கிருந்த கதிரையில் சற்றே சாய்ந்தாள் சில்மியா.

அவ்வேளையில் "சில்மியா... சில்மியா..." என்று அழைக்கும் சப்தம் கேட்டு விழித்துப் பார்த்த சில்மியா, சாமிலாவைக் கண்டதும் இன்முகம் காட்டி "வாங்க... வாங்க... உள்ள வாங்க..." என்று வரவேற்றாள்.

குற்றவுணர்ச்சி மேலிட, தலைகவிழ்ந்தபடியே உள்ளே வந்து உட்கார்ந்த சாமிலாவை, தேநீர், சிற்றுண்டி என்பன கொடுத்து உபசரித்தாள் சில்மியா. சில நிமிடங்கள் கழித்து

"சில்மியா... நான் எதுக்கு வந்தன் என்றா என்னோட மகள் காலிதா படிக்கிற பாடசாலைல கட்டுரைப் போட்டி வைக்கிறாங்களாம். பத்தாம் ஆண்டுப் பிள்ளைகளுக்கு எல்லாம் ஒரு போட்டியாம். அது தான் மாமிகிட்ட கேட்டு ஒரு கட்டுரை எழுதித் தாங்க எண்டு மகள் ஒத்தக்கால்ல நிக்கிறா... அது தான் வந்தன்... ஏலாதெண்டு சொல்லாம ஒரு கட்டுரை எழுதித் தாங்க சில்மியா..." என்றாள் ஷாமிலா.

"ஓஹோ... அப்படியா விஷயம்... ஆனா... நான் தான் அதையெல்லாம் விட்டு மிச்சம் காலமாகிட்டே... இப்ப வீட்டு வேலய மட்டும் தான் பார்க்கிறன். கட்டுரை எழுதினா, கத எழுதினா வீட்டுக்குள்ள முடும வருமாம்... அதோட பொம்பிளைக்கு அதெல்லாம் தேவையில்லயாம் எண்டு உங்க தம்பி சொல்லிட்டாரு...." சில்மியா கூறிக்கொண்டிருக்கும் போதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன தாத்தா... எப்ப வந்த...” என்று கேட்டவாறே உள்ளே நுழைந்தான் சாதீக்.

சில்மியா மௌனமானாள். சாமிலாவே அவளது தம்பியிடம் கதைக்கத் தொடங்கினாள்.

“சாதீக் நான் வந்த என்னன்னா... என்ட மகள் காலிதாக்கு கட்டுரை போட்டி நடக்கப் போகுதாம்... அதுல பங்கு பத்துறதுக்கு மாமிகிட்ட கட்டுரை எழுதி வாங்கித்தரச் சொல்லி ஒத்தக்கால்ல நிக்கிறா... அது தான் வந்தன்... ஆனா சில்மியா இப்ப எழுதுறதில்லயாமே... நீ தான் எழுத வேணாம்னு சொன்னதாம்னு குறைப்பட்டு சொல்றா...” என்று இழுத்தாள்.

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் ஷாமிலாவின் நாடகத்தைப் பார்த்து, தனது சகோதரியின் பொறாமைத்தனத்தை அறிந்துகொண்ட சாதீக் சில்மியாவிடம்

“சில்மியா மன்னிச்சிடுங்க... உங்க திறமையையும், கல்வியையும் மதிக்காம உங்க முன்னேற்றத்தை தடுத்திட்டேன். இனி ஒரு போதும் உங்க முன்னேற்றத்த தடைசெய்ய மாட்டேன்... இனி நீங்க உங்க விருப்பப்படியே எழுதுங்க... நான் உங்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்து தருவேன்...” என்று கூறி முடித்தான்.

“ம்ஹ்ஹ்...சரி...” என்று பெருமூச்சு விட்ட சில்மியா “எல்லாம் இறைவன் செயல்... மனிதர்களை மாற்றும் எந்தச் செயலையும் இறைவன் நாடினால் ஒரு நொடியில் முடித்து வைப்பான்... யாவும் அவன் செயல் தான்... அல்ஹம்துலில்லாஹ்...” என மனதால் இறைவனுக்கு நன்றி செலுத்தியவளாக ஷாமிலாவின் மகளுக்கு கட்டுரை எழுதத் தொடங்கினாள்.

தன் தவறை உணர்ந்த சாமிலாவின் உள்ளமும் தெளிவடைந்தது

முற்றும்.



### பொன்மொழி


உலகம் உன்னை அறிவதை விட, உன்னை உலகுக்கு அறிமுகம் செய்து கொள்.

~அப்துல் கலாம்~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நம்மவர் படைப்புகள்




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “உலகம் முழுவதும் எங்கள் கதைகள்”
## சிறுகதைத் தொகுதி வெளியீட்டுப் படங்கள்.


































ISSN 2961-5194
9 772961 519006

Designed by: N Susmin Sanfar, Mutur.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org